
பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 14 | வியாழக்கிழமை | (27-05-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 160

ராம்கோ
சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.



## முதலில் அரசு - புலிகள் இணக்கப்பாடு
## அதன் பின்னரே பேச்சுக்கான ஏற்பாடு
### நோர்வேத் தூதுவர் எரிக்சோல் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக இணக்கம் ஏற்பட்ட பின்னரே பேச்சுவார்த்தை தொடர்பான நிகழ்ச்சி நிரல், இடம், திகதி என்பன குறித்த அறிவிப்பை நோர்வே வெளியிடும் என இலங்கைக் கான விசேட சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் நேற்று கிளிநொச்சியில் வைத்து பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழச்செல்வனை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் கிளிநொச்சியில் வைத்து சந்தித்த பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

(12ம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாக சபையே முதலில் அமைக்கப்பட வேண்டும்!
## விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை
## எரிக்சோலிடம் தமிழ்ச்செல்வன் மீண்டும் வலியுறுத்து

(கிளிநொச்சி)

**தமிழர் தாயகப் பிரதேசத்தில் இடைக்கால தன்னாட்சி அதிகாரமுள்ள நிர்வாக சபையே முதலில் அமைக்கப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை மீண்டும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் மூலம் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.**

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் வைத்து சந்தித்து பேசிய பின் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்பத்திரிகையாளர் மாநாடடில் அவர மேலும் தெரிவிததிருப்பதாவது, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் அபிலாசைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு நடந்து முடிந்த தேர்தலில் அவர்கள் தந்த ஆணையை நாம் நிறைவேற்ற வேண்டியவராக உள்ளோம்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரமுடைய நிர்வாகசபை அமைக்கப்படுவதன் மூலம் எமது மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் மேற்கொண்ட பின்பே இனப்பிரச்சினை தீர்வுக்கான இறுதிப் பேச்சுவார்த்

(12ம் பக்கம் பார்க்க)

## நீர்வேலி லொறி விபத்தில் இளைஞர் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற லொறி, சைக்கிள் விபத்தில் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் மரணமானார்.

நேற்றுக் காலை 8.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. படுகாயமடைந்த பிரஸ்தாப இளைஞர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

எனினும் இச்சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் மரணமானார். சடலம் நேற்று மாலை வரை அடையாளம்காணப்படவில்லை. சடலம் அடையாளம் காணும் பொருட்டு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (த-19)

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக டிக்ஷிற்

(புதுடில்லி)

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக ஜே.என்.டிக்ஷிற் நியமிக்கப்பட்டுள்ளார்.

வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனாதாக் கூட்டணி அரசில் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரஜேஸ்மிஸ்ரா ராஜினாமா செய்ததை அடுத்தே ஜே.என்.டிக்ஷிற் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக காங்கிரஸ் கூட்டணி அரசினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை இந்தி ஒப்பந்தத்தின் பெறுபேறாக இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்தபோது ஜே.என்.டிக்ஷிற் இலங்கைக்கான இந்திய தூதுவராகக் கடமையாற்றியிருந்தார். (12ம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பில் 4 பேர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கந்தளாயில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பு ஒன்றில் 4பேர் காயமடைந்தனர்.

உணவகம் ஒன்றில் இடம்பெற்ற இக் குண்டுவெடிப்பில் உணவக சிப்பந்தி மற்றும் மாணவர்கள் இருவர் உட்பட நான்குபபேர் காயமடைந்தனர் (த)

## நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்க அமைச்சு நடவடிக்கை
### யாழ். வந்த ஹரீம் பீரிஸ் அறிவிப்பு

யாழ்மாவட்டத்தில் உலர்உணவு நிறுத்தப்பட்ட அனைவருக்கும் மீளவும் நிவாரணம் வழங்கப்படும் என புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார். யாழ். குடாநாட்டு புனர்வாழ்வு புனரமைப்பு நிலைமைகள் குறித்து நேரில் அறியும் வகையில் நேற்று யாழ. வந்த ஹரீம் பீரிஸ் செயலகத்தில் வைத்து அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்த போதே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

யாழ். மாவட்டத்தில் உலர் உணவு நிவாரணம் பெற்று வந்த ஒரு லட்சத்து 26 ஆயிரம் குடும்பங்களில் இனி வரும் காலங்களில் 59ஆயிரத்து 464 குடும்பங்களுக்கு மாத்திரமே நிவாரணம் வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(12ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாநகர சபையினுள் கிரனைட் கண்டுபிடிப்பு
### பணியாளர் உட்பட இருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை வளவினுள் தேடுதல் மேற்கொண்ட பொலிசார் கைக்குண்டு மற்றும் ஹெரோயின் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளனர்.

கடநத வெள்ளிக்கிழமை போதைப் பொருள் தடுப்புப் பொலிசார் மேற்கொண்ட தேடுதலின் போதே கிரனைட் மற்றும் நூற்றுக்கு மேற்பட்ட ஹெரோயின் பக்கற்றுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாநகர சபையின் பொறியியல் திணைக்களத்தினுள் இருந்தே இவை மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் மஜிஸ்ரேட் நீதிமன்ற வழக்குகள் தொடர்பான பதிவுகளும் பொலிசாரிடம் சிக்கியுள்ளது.

சம்பவம் தொட்ர்பாக மாநகர சபைப பணியாளர் ஒருவரும், இன்னொருவரும் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் வேறு யாரேனும் சம்மந்தப்பட்டுள்ளார்களா என்பது குறித்து ஆராய்ந்து வருவதாக மாநகர சபை ஆணையாளர் ஜெயந்த லியனகே தெரிவித்துள்ளார். சம்பவம் குறிதது பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். (த-6)

## புலிகளுடன் நல்லுறவைப்பேண சோனியாகாந்தி விருப்பம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இந்திரா



காந்தி கொண்டிருந்த சமரச நிலையை போன்று தானும் அதனைக் கைக்கொள்வதற்கு எண்ணியுள்ளதாக இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி விருப்பம் தெரிவித்துள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் முன்னாள அமைச்சர் ஒருவருக்கு சோனியா காந்தி இத்தகவலை தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் மேற்கத்தைய நாடுகள் தலையிடுவது இந்தியாவின் வல்லாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும் அதற்கு தீர்வு காணும் வகையில் விடுதலைப் புலிகளுடன் சமரச முயற்சிகளை பேணுவதற்கான தனிப்பட்ட கொள்கையினை தான் கொண்டுள்ளதாகவும் சோனியாகாந்தி அந்த அமைச்சரிடம் கூறியுள்ளதாவும் இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை கட்டுப்பாட்டுப் பகுதிகளின் அபிவிருத்திக்கு நிதியுதவி வழங்க இந்தியா தயாராக இருப்பதாக இந்தியத் தூதுவர் நிருபம்சென் நேற்று முன்தினம் கூறியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுவிளம்பரம்

### நாவல்கள்

செங்கைஆழியானின் புதிய நாவல்கள். போரே நீ போ, வானும் கனல் சொரியும், சாமபவி, ஈழராஜா எல்லாளன், கூடில்லா நத்தைகளும் ஓடில்லா ஆமைகளும் மற்றும் கிடுகுவேலி, யானை, குவேனி, காவோலை, ஆச்சி பயணம் போகிறாள்- பிரபல புத்தகசாலைகளில் விறபனையாகின்றன. கமலம் பதிப்பகம் 75/10A, பிறவுண்வீதி, நீராவியடி யாழ்ப்பாணம். (8530)

### ஆட்சேர்ப்பு திகதி நீடிப்பு

(கொழும்பு)

படைத்துறைக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றது. மே மாதம் 6 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் நடைபெறுமென முன்னர் அறிவித்திருந்த இலங்கை படைத்துறை, புதியவர்களை சேர்த்துக் கொள்வதற்கான காலவரையறையை ஜூன் மாதம் முதலாம் திகதி வரை நீடித்துள்ளது.

திருமணமாகாத 18 வயதிற்கும், 24 வயதிற்கும் இடைப்பட்டவர்களே இந்த ஆட்சேர்ப்பில் பங்குபெற முடியுமெனவும் புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களின் உயரம் குறைந்தது 5 அடி 4 அங்குலமாகவாவது இருக்க வேண்டும் எனவும், குறைந்த பட்சம் தரம் 8 அல்லது 9 வரை கல்வி கற்றிருக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவவாறு புதிதாகப் படைத்துறைக்கு இணைத்துக் கொள்ளப்படுவர்களுக்கு உள்நாட்டுப் பயிற்சிகள் மட்டுமன்றி, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் படையின் கூட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளதாகவும் படைத்துறை அறிவித்துள்ளது.

(உ)

### ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலகம், பிரதி வியாழக் கிழமை தோறும் நல்லை நாவலர் மணி மண்டபத்தில் நடாத்தி வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று உள மருத்துவப் பிரிவைச் சேர்ந்த எஸ். ரவீந்திரன், "சமூக முரண்பாடுகளைக் களைவதற்கான யோகாசன வழிமுறைகள்" என்னும் பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ)

# விரிவுரையாளர்களைத் தட்டிக் கேட்கும் மாணவர்கள் பழிவாங்கப்படுகின்றனர்

## பல்கலைக்கழகங்களின் நிலை குறித்து மானிய ஆ.கு. அங்கத்தவர் ரத்தினஜீவன்

(கொழும்பு)

**விரிவுரையாளர்கள் மாணவர்களின் வரவையே அதிகமாக எதிர்பார்க்கின்றார்கள். குறிப்பாக தாம் விரிவுரைகளை நிகழ்த்தும் போது அதில் மாணவர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றார்கள்.**

**மாணவர்களுக்குத் தாம் கூறியவை விளங்கியதா? விளங்கவில்லையா? என்பதை நினைத்துப் பார்பதில்லை. ஏதோ தங்களின் கடமையை செய்தால் போதும் என எண்ணும் அவர்கள் மாணவர்களின் எதிர்காலம் குறித்துச் சிறிதும் எண்ணிப் பார்ப்பதில்லை.**

**இதனால் தான் விரிவுரைகளிந்கு பல மாணவர்கள் சமுகமளிக்காமல் இருக்கின்றார்கள்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் பல்கலைக்கழக பேராசிரியரும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் அங்கத்தவருமான ரத்தினஜீவன்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனததினால் நடாத்தப்பட்டு வரும் 'விடிவும்வேளை' நிகழ்வில கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

### கண்டனம்

தற்போதைய விரிவுரையாளர்களின் இத்தகைய பொறுப்பற்ற நடவடிக்கைகளை மூத்த விரிவுரையாளர்கள் கண்டித்து வருகின்றார்கள்.

இதற்கிடையில் விரிவுரைகள் பற்றிக் குறைகூறும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு சம்பந்தப்பட்ட சில விரிவுரையாளர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதுடன் பழிவாங்கப்படுகின்றனர்.

இதனால் மாணவர்களின் கல்வி உரிமைகள் பறிக்கப்படுகின்றதாகவும் மாணவர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை, ஐரேப்பிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்கள் மாணவர்களுடன் மிக நெருக்கமாக பழகுகின்றார்கள். மாணவர்களின் குறை நிறைகளை கேட்டறிகின்றார்கள்.

இதனால் அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பூரண அறிவைப் பெறுகின்றார்கள். அத்துடன் விரிவுரையாளர்கள் மாணவர்களுக்கு எவ்வளவு விளக்கமான முறையில் விரிவுரைகளை நிகழ்த்துகின்றார்களோ அதற்கேற்ப அவர்களுக்கு சம்பளமும் வழங்கப்படும்.

ஆனால் இலங்கையில் அப்படியானதொரு நடைமுறை இல்லை. விரிவுரையாளர் விளக்கமாக படிப்பிக்கின்றாரோ இல்லையோ அவருககு மாதம் மாதம் உரிய சம்பளம் வழங்கப்படும்.

### தேவையற்ற நிகழ்வுகள்

இதேசமயம், பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தமது பட்டப்படிப்பை முடிததுக்கொள்ள முடியாத சூழ்நிலையும் தற்போது அதிகரித்து வருகின்றது.

தேவையற்ற வகையில் நிகழ்வுகளை பல்கலைக்கழகங்களில் நடத்துவதே இதற்கு பிரதான காரணம். இவ்வாறு நிகழ்வுகளை நடத்துவதால் மாணவர்களின் கல்வி மிகவும் பாதிப்படைகின்றது.

இதற்கு விரிவுரையாளர்களை மட்டும் குறைகூற முடியாது மாணவர்களும் பல்கலைக்கழக நடவடிககைகளுக்கு புறம்பான வகையில் சில செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

எனவே இத்தகைய செயற்பாடுகளை நிறுத்தி மாணவர்கள் பட்டப்படிப்புக்களை குறிப்பிட்ட காலததிற்குள் முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அல்லது மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படையாத வகையில் பல்கலைக்கழகங்களில் முக்கியமான நிகழ்வுகளை மட்டும் நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும்.

இதேவேளை,பெரும் இனைல்கள் மத்தியில் பல்கலைக்கழகத்தில் கல்விகற்று வெளியேறும் மாணவர்கள் வேலையில்லாப் பிரச்சினையால் நிம்மதியற்றிருக்கின்றார்கள்.

### ஏழை மாணவர்கள்

பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களில் பலர் ஏழை மாணவர்கள். அவர்கள் வறுமையின் மத்தியிலும் பெருமளவு பணத்தை செலவழித்து படித்தும் தமக்கு வேலை கிடைக்கவில்லையே என்ற விரக்தியினால் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்கின்றார்கள்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற மாணவி ஒருவர் மத்திய கிழக்கு நாட்டில் உள்ள ஹோட்டல் ஒன்றில் மேற்பார்வையாளராக கடமையாற்றுகின்றார்.

இவ்வாறு அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதால் நாம் கல்விச் சமூகத்தினரை இழந்துவிடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றோம்.

தற்போது கூட இங்கு மருத்துவராக படிக்கும் மாண்வர்கள் தமகது போதிய சம்பளம் கிடைப்பதில்லை என்பதால் வெளிநாடுகளுக்குச் செல்கின்றார்கள்.

இதனால் இங்கு மருத்துவர்களுககு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இவைதவிர, வெளிநாடுகளில் இருந்து மருத்துவர்களை இலங்கைக்கு அழைக்க வேண்டியிருக்கின்றது.

இது ஒரு புறமிருக்க கண் பார்வையற்ற மற்றும் செவிப்புலனற்ற அதாவது அங்கவீனமுற்ற மாணவர்களின் நலன்களைப் பேணி அவர்களுக்கு சில விசேட சலுகைகளை வழங்க அரசு தீர்மானித்திருக்கின்றது.

### சலுகை கிடைக்குமா?

ஆனால் அந்த சலுகைகள் உடனடியாக அவர்களுக்கு கிடைக்குமா? என்பது தான் சந்தேகம்.

அரசாங்கம் தற்போது வேலையற்ற பட்டதாரிகளின் பக்கம் தனது கவனத்தைச் செலுத்தியிருக்கின்றது.

அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கான நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டு வருகின்றது.

இதனால் அங்கவீன மாணவர்கள் இதுவிடயத்தில் கொஞ்சம் பொறுமையாக இருக்க வேண்டும்.

இவை தவிர கலைப்பீட மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் சந்தர்ப்பம் அண்மைக் காலங்களாக அருகி வருவதால் அவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பாடத்தைப் போதிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கலைப்பீட மாணவர்கள் உட்பட சகல பீட மாணவர்களும் இந்தப் பாடத்தை கற்க வேண்டும.

அத்துடன் ஆங்கிலப் பாடத்தை ஒரு பாடமாக கற்கும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி அல்லது தேவையான நூல்களை வழங்கி சலுகைகளை வழங்குவதறகும் அரசு ஆலோசித்து வருகின்றது என்றார்.

(உ-60,10)

# வெளிநாட்டுப் படைகளின் வரவால் போர் குறித்த அச்சத்தில் பொதுமக்கள்

(கொழும்பு)

புதிய அரசின் அதிகரித்த போரியல் சார் நடவடிக்கைகள் மீண்டும் நாட்டில் போர் வருமோ? என்ற ஐயுறவை பொதுமக்களிடத்தில் ஏற்படுத்தி வருவதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தவகையில், வெளிநாட்டுப படைகள் கலந்துகொண்டு போர்ப் பயிற்சி பெறும நடவடிக்கை ஒன்று முதல் தடவையாக விரைவில் இலங்கையில் நடைபெறவிருப்பதை பாதுகாப்புப படை வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

தெற்காசியாவின் அமெரிக்கக் கூட்டுப்படையினரால் இலங்கைப் படையினருக்கும் நேபாளம் பங்களாதேஷ், மொங்கோலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் படைகளுக்கும் இங்குள்ள அடர்ந்த காட்டுப்பகுதி மற்றும் கடற்பிரதேசஙகளை அண்டி போர்ப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தென்னாசிய அமைதிக் காப்புத் திட்டத்தின் அடிப்படையில் இடமபெறவுள்ள பலநோக்கு பிளட்டூன் பயிற்சித்திட்டம் (எம்.பி.ஈ.) என்ற இந்த இருமாத பயிற்சி நடவடிக்கையில் இராணுவத்தில் இருந்து இரண்டு பிளட்டூன்களும் கடற்படை மற்றும் விமானப்படைகளிலிருந்து தலா ஒவ்வொரு பிளட்டூன்களும் பங்கேற்கவிருக்கின்றன.

இது இவ்விதமிருக்க, இராணுவத்திற்குப் பயிற்சியளிக்கும் நோக்கில் பெருமளவு இந்திய இராணுவ அதிகாரிகள் பெருந்தொகை இராணுவ தளபாடங்கள் சகிதம் இலங்கை வந்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, கடந்த 6ஆம் திகதிமுதல் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் இடம் பெற்றுவருவதுடன், இந்த நடவடிக்கை எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் பங்கேற்கும் போது, அவர்களின் போரியல் தரத்திற்கேற்ப தமது படைததரத்தையும் பேணுவதில் அரசாங்கம் முனைப்புடன் ஈடுபட்டுள்ளதையே இந நடவடிக்கைகள் காட்டுவதாக அரசியல் ஆய்வாளர்கள் மேலும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(உ)

# வடக்கு - கிழக்கை கட்டியெழுப்ப நிரந்தர சமாதானம் அவசியம் அமெ.தூதுவர் கருத்து

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த பேச்சுக்களில சகல தரப்பினரும் ஒருமைப்பாட்டுடன் செயற்படுவார்கள் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரிலன்ராட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வர்த்தக சபையின் வழிகாட்டலில் கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் கடந்த கால போர் அனர்த்தங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பகுதிகள் கட்டியெழுப்பப்பட வேணடுமாயின் நாட்டில் நிரந்தர சமாதானம் நிலை பெறுவது அவசியமானதாகும். அத்துடன் இங்கு நிரந்தர அமைதி நிலவும் பொழுது தான் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான உலக நாடுகளின் உதவிகள் இலங்கைக்கு கிடைக்கும்.

எனவே, நாடு அபிவிருத்தி என்ற இலக்கை எட்டுவதற்காக அனைத்துத் தரப்பினரும் சமாதானத்திற்காக உழைப்பர் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-4,61)



பெண்கள் பண்பாட்டு மையத்தில் அண்மையில் இடம் பெற்ற "ஆற்றலைத்தேடி" எனும் ஆயிரம் பெண்களுக்கான பயிற்சித்திட்ட நேர்முக அரங்காடல் நிகழ்வில் பங்குபற்றியோரைப் படத்தில் காணலாம்.

## ஐ.நா.வில் அமெரிக்கா தாககல் செய்த வரைபுத் தீர்மானத்தில்

# இறையாண்மையுள்ள அரசு ஈராக்கில் உருவாக வழிவகை செய்யப்படவில்லை

### பிரான்ஸும் ஜேர்மனியும் சுட்டிக்காட்டு

**ஈராக்கின் எண்ணெய் வளங் கள் மீது அந்நாட்டின் இடைக்கால அரசிற்கு அதிகாரம் அளிக்கவும் ஆட்சி அதிகாரத்தை [illegible]ர் கையில் ஒப்படைக்க வகை செய்யவும் வரைபுத் தீர்மானத்[illegible] கிய நாடுகள் மாமன்ற பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா தாக்[illegible] செ[illegible]துள்ளது.**

அமெரிக்க தலைமையிலான ஆக்கிரமிப்புப்படைகள் இன்னும் ஓராண்டுககு ஈராக்கில் இருக்கவும் அத்தீர்மானத்தில் வகைசெய்யப்பட்டுள்ளது. ஆனால், அப்படைகள் மீது எவ்வித அதிகாரமும் இடைக்கால ஈராக்கிய அரசுக்கு இருக்காது. அந் நாட்டில் அமைதியையும் பாதுகாப்பையும் உத்தரவாதம்செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அப்படைக்கு அந்த வரைபுத் தீர்மானம் அதிகாரம் அளிக்கிறது.

இடைக்கால அரசுக்குத் தலைமை தாங்கும் அதிபர்,இரு துணை அதிபர்கள்,பிரதமர், 26 அமைச்சர்கள் ஆகியோரை நியமிக்கும் பொறுப்பை ஐ.நா. பொதுச் செயலர் கோபி அன்னானின் சிறப்புத் தூதுவர் லக்தர் பிராஹிமியிடம் அளிக்கவும் அந்த வரைவுத் தீர்மானம் ஒப்புக் கொணடுள்ளது.

ஈராக்கில் பணியாற்றும் ஐ.நா. அலுவலர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத் தனிப்படை ஒன்றை உருவாக்கவும் அதில் வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் அமெரிக்கா தலைமையிலான ஆக்கிரமிப்புப் படையின் கட்டுபபாட்டிலேயே அப் படை செயற்படும்.

இறையாண்மை கொண்ட ஈராககிய இடைக்கால அரசு ஜுன் 30 தில் பொறுப்பை ஏற்கும் நாட்டின் புதிய அரசியல்சாசனத்தை உருவாக்குவதறகான அரசியல் சாசன சபை அடுத்த ஆண்டு ஏற்படுத்தப்படும். அது ஈராக்கிய மக்களால் தேர்தெடுக்கப்பட்ட தற்காலிக அரசாக இருக்கும். அதற்கான தேர்தல் அடுத்த ஆண்டு ஜனவரி 31க்குள் நடத்தப்படும்.

அரசியல்சாசனம்வகுக்கப்பட்ட பின்னர் அடுத்த ஆண்டு இறுதியில் ஈராக்கிய மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் இறையாண்மை கொண்ட அரசு பதவியேற்கும் இந்த நடைமுறைகளில் ஈராக்கிய மக்களை பங்கேடுக்கச் செய்யும் பணியை ஐ.நா மாமன்றம் மேற்கொள்ளும்

ஈராக்கின் கச்சா எண்ணெய்யை விற்று கிடைத்த தொகையான 45 ஆயிரம் கோடியைக்கொண்டு ஈராக் வளர்ச்சி நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் மீதான கட்டுப்பாடு இடைக்கால அரசிடம் அளிக்கப்படும் சர்வதேச தணிக்கை வாரியமானது அத்தொகை எந்த வகையில் செலவிடப்படுகிறது. என்பதைக் கண்காணிக்கும். ஆனால் அத் தொகையை ஈராக்கிய அரசு தன்விருப்பம் போல் செலவு செய்துகொள்ளலாம். அதை தடுப்பதற்கு அத்தணிகை வாரியத்திற்கு அதிகாரம்கிடையாது.

ஆயுதங்கள் வாங்குவதற்கு ஈராக்கிற்கு விதிக்கப்பட்டுள்ள தடையும் விலக்கிக் கொள்ளப்பட்டு விடும். நாட்டை புனர்நிர்மாணம் செய்தல் ,வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றுதல், சமுதாய சேவைப் பணிகளை செயற்படுத்துதல், சிவில் நிர்வாகத்தை நிர்மாணித்து நடத்துதல ஆகிவற்றில் இடைக்கால அரசுக்கு ஐ.நா உதவ வேணடும் என்றும் அந்த வரைபுத் தீர்மானம் கேட்டுக் கொண்டுள்ளது.

ஐ.நா பாதுகாப்பு மன்றத்தில் உள்ள பிரான்ஸ், ஜேர்மன் உள்ளிட்ட பல நாடுகள் இந்த வரைபுத் தீர்மானத்தைப் பொதுவாக வரவேற்றுள்ளனர்.

ஆனால் ,பொலிஸ் மற்றும் இராணுவத்தின் மீதான கட்டுப்பாட்டை ஈராக்கின் இடைக்கால அரசிடம் ஒப்படைப்பதற்கு காலககெடு நிர்ணயிக்க வேண்டும் என்று பிரன்ஸ் வலியுறுத்தியுள்ளது.

இராணுவத்தின் மீது அந்த அரசுக்கு கட்டுப்பாடு இருந்தால்தான அதற்கு முழுமையான இறையாண்மை இருப்பதாக அர்த்தம் என்றும் பிரான்ஸ் கூறியுள்ளது. ஜேர்மனியும் இதேபோன்ற கருத்தைத் தெரிவித்துள்ளது.

அடுத்து வரும் நாட்களில் இத் தீமானத்தின் மீது ஐ.நா உறுப்பினாகள் விவாதம் நடத்தி அதை நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (உ)



அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பொப் பாடகி மடோனாவின் இசை நிகழ்ச்சி.

## ஆஸி. அதிகாரி தங்கியிருந்த ஹோட்டல் முன் குண்டுவெடிப்பு

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் அவுஸ்திரேலியத் தூதராக அதிகாரி ஒருவர் தங்கியிருந்த ஹோட்டல் முன் நேற்றுமுன்தினம் கார் குண்டொன்று வெடித்ததில் குழந்தை ஒன்று காயம் அடைந்தது.

பக்தாத்தில் உள்ள கர்மா ஹோட்டலில் அவுஸ்திரேலியத் தூதரகத்தின் முக்கிய அதிகாரியொருவர் தங்கி இருந்தார்.இந்தக் ஹோட்டல் முன் நிறுத்தப்பட்டிருந்த காருக்கு அடியில் குண்டு வைக்கப்பட்டிருந்தது என்று சம்பவத்தை நேரில் பார்த்த பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குண்டு வெடிப்புக்குப் பின் அந்த இடத்தில் தீப்பற்றி எரிந்ததாகவும் கூறப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஈராக் மீது படையெடுத்துச் சென்ற அமெரிக்கா தலைமையிலான கூட்டணியில் அவுஸ்திரேலியாவும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## உலக தரிசனம்

### வேலை வாய்ப்பை வெளியில் வழங்க அமெரிக்கா தடை

(நியூயோர்க்)

வெளிநாடுகளுக்கு வேலைகளைக் கொடுப்பதற்குத் தடை விதிக்கும் சட்டம் ஒன்றை அமெரிக்காவில் உள்ள டென்னசி மாநிலம் கொண்டு வந்துள்ளது.

அமெரிக்காவின் பணியாளர்களுககுச் சம்பளம் அதிகம் என்பதால், அங்கு செய்ய வேண்டிய வேலைகளை ஆசியா போன்ற குறைந்த சம்பளம் உள்ள நாடுகளுக்குக் கொடுத்து அந்த நாட்டு கம்பனிகள் அதிக இலாபம் பெற்று வருகின்றன.

இதனால், அமெரிக்கர்கள் வேலை வாய்ப்பை இழந்து வருவதையடுத்தே இச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. (உ)



லண்டனில் உள்ள தனது இல்லத்தில் வைத்து 50 அடி நீளத் தேசியக்கொடியில் கையெழுத்திடும் இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளெயர். யூரோ 2004 கால்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்கவுள்ள இங்கிலாந்து அணியை ஊக்கப்படுத்தத் தயாராகிறது இக் கொடி. உள்நாட்டுப் போட்டிகள் நடைபெறும் இடங்களுக்கு இக் கொடி கொண்டு செல்லப்பட்டு, ரசிகர்களிடம் கையெழுத்து பெறப்படவுள்ளது.

## ஈராக்கில் ஜனநாயகம் மலர 5 நடவடிக்கைகள் எடுக்கப்படும்

### அமெரிக்க அதிபர் புஷ் அறிவிப்பு

ஈராக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்தவும் அதைச் சுதந்திர நாடாககவும் குறிப்பாக 5 நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன், அங்கு மக்களால் தேர்தெடுக்கப்பட்ட அரசு அடுத்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டுவிடும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

ஈராக்கில் அமெரிக்க இராணுவ வீரர்கள் மீது பயங்கரவாதத் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. அதனால் புஷ் மீதும் அமெரிக்க மக்களுக்கு அதிருப்தி அதிகரித்து வருகிறது.ஈராக் போரை அவர் கையாண்ட விதம் குறித்தும் பலருக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது.இந்த ஆண்டு அமெரிக்க தேர்தல் நடைபெறவுள்ளது.அவரது மதிப்பு குறைந்து வரும் நிலையில் மேற்கண்ட அறிவிப்பை அவர் விடுத்துள்ளார்.


ஈராக்கின் இடைக்கால அரசிடம் யூன் 30ஆம் திகதி ஆட்சியதிகாரத்தை அமெரிக்கா ஒப்படைக்கும். இப்போது ஈராக்கில் அமெரிக்கத் தலைமையில் 1 இலட்சத்து 38 ஆயிரம் வீரர்கள் உளளனர். எவ்வளவு காலத்திற்கு தேவையோ அதுவரை அப்படை அங்கே இருக்கும்.

ஈராக்கில் பாதுகாப்பு உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள 2இலட்சத்து 80ஆயிரம் இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸாருக்கு பயிற்சி அளிக்கப்படும்.

ஈராக்கிலுள்ள அபுகிரேயிப் சிறைச்சாலையில் ஒருசில அமெரிக்க வீரர்களின் நடவடிக்கைகளால் நாட்டுக்கே அவப்பெயர் ஏற்பட்டு விட்டது. எனவே, அவமானச் சின்னமாகிவிட்ட அச்சிறைச் சாலை தகர்க்கப்பட்டுவிடும்.அதற்குப் பதிலாக உயர்பாதுகாப்புக. கொண்ட புதிய சிறைச்சாலையை அங்கு கட்டிக் கொடுப்போம். ஈராக்கில் அராஜகம் தலை விரித்து ஆடும் பகுதிகளில் அமைதியை ஏற்படுத்துவோம்.

அந்நாட்டில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிக்கும் பணியையும் தொடர்ந்து செய்வோம். ஈராக்கில் மக்களாட்சியை ஏற்படுத்த வகைசெய்யும் வரைவுத் தீர்மானம் ஐ.நா பாதுகாப்பு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஈராக்கில் சுயேட்சையான தேர்தல் ஆணையத்தை உருவாக்குவதில் ஐ.நா தேர்தல் குழுவினர் தேவையான உதவிகளைச் செய்வார்கள்.



2005ஜனவரியில் ஈராக்கில் தேசிய தேர்தல்கள் நடத்தப்படும்.

ஈராக்கில் மக்களால் தேர்தேடுக்கப்பட்ட அரசை ஏற்படுத்துவது எளிதான காரியம் அல்ல. அதற்கு முன்னதாகவும் அந்த அரசு அமைந்த பின்னரும் கூட பயங்கரவாத செயல்கள் தொடர்ந்து நடக்கக் கூடும். அதை எதிர்கொண்டுதான் அங்கு ஜனநாயகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று புஷ் தெரிவித்துள்ளார். (உ)

# மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்தியில் அழகியல் - இலக்கியக் கல்வி

இந்த நூற்றாண்டை எதிர்நோக்கும் உலகிலுள்ள தேசிய இனங்கள் எல்லாம் தமது அடையாளங்களை நிலை நிறுத்தக் கலைகளையும், இலக்கியங்களையுமே பெரிதும் நம்பியிருக்கின்றன என யுனஸ்கோ நிறுவனம் தனது அண்மைய வெளியீட்டில் தெரிவித்திருந்தது. இத் தேசிய இனங்களில் தமிழினமும் ஒன்றாகும். இதற்கமைய தமிழினமும் தனது தேசிய கலைத்துவ அடையாளங்களை நிலை நிறுத்த பல்வேறு முயற்சகளையும் துணிகரமான முடிவுகளையும் எடுக்கவேண்டியது இன்றைய காலத்தின் பணியாகவுள்ளது.

இச் சூழலில் எதிர் காலச் சந்ததிகளான இன்றைய மாணவர்களுக்கு தாய் மொழியினூடு அழகியற் கலைகள், இலக்கியக் கல்வியினூடாக புதிய சிந்தனைகளையும், புத்தாக்கத் திறன்களையும் விருத்தியாக்கப் பல முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதற்குச் சிறந்த களங்கள் பாடசாலைகளே ஆகும். ஆனாலும் பாடசாலை முறைமையில் மாணவர்களின் அசைவும் இடப்பெயர்வுகளும் இல்லாமல் வகுப்பறைக்குள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. பரீட்சைகளை நோக்கமாகக் கொண்டு பாடசாலையிலும், வீட்டிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் மாணவர்கள் இயந்திரங்களாகச் செயற்படுகின்றனர். இதனால் நீண்டகால நோக்கில் சுயநலம் கூடியவர்களாகவும், தேசப்பற்றற்றவர்களாகவும், அழகியலுணர்வு இல்லாத மனிதத்துவப் பண்புகளற்றவர்களாகவும் மாறக்கூடிய நிலைமைகள் தோன்றுகின்றன. இவற்றை நீக்க பாரம்பரிய கலை - அழகியல் - இலக்கியங்களை நயக்கும் திறன்களை மாணவர்கள் பெறக் கூடிய கலைத்திட்டச் சீராக்கங்களைச் செய்ய வேண்டியுள்ளது.

எமது தொன்மையான நாட்டார் மரபு அழகியல் இலக்கியக் கல்வியானது வாழ்க்கைத் தொழில்களோடும், வாழ்வோடும் ஒன்றிணைந்த செயற்பாடாக விரவி வளர்ந்துள்ளது. வரன் முறையான கல்விச் செயற்பாடு சமூக முறைமைகளோடு ஒன்றிணைந்து வளரலாயின. இதனோடு அழகியல் - இலக்கியக் கல்வி முறைமை சார்ந்த வகையிலே ஒழுங்கமைத்தல் நிகழலாயிற்று. முறைசார்ந்த வகையில் அழகியல் - இலக்கியக் கல்வியை கையளித்தல், முறைமை சாரா வகையில் நாட்டார் மரபுகள் வழியாக அழகியல் இலக்கியக் கல்வியை கையளித்தல் என்ற இரு வகைக் கோலங்களில் கல்விக் கையளிப்புக்கள் நிகழ்ந்து வருகின்றன. இது. சைவ - இந்து மரபிலே,

1. தெய்வீக உணர்வுகளை அழகியல் - புராண - இலக்கியங்களின் விழுமியங்களை மாணவர் உள்ளங்களில் நிலைநிறுத்தல்.

2. அதைனைத் தொடர்ந்து பராமரித்தல் - அவற்றினூடாக மானிடத் தர்மங்களை நிலை நிறுத்தல்.

3. தர்மங்களை வளப்படுத்தும் மனவெழுச்சிகளை வளர்த்தல்.

4. அறியாமையில் இருந்து மீண்டெழ தர்ம ஒளியைக் காட்டுதல், உய்வதற்கும், உயர்வதற்கும் இவ் அழகியல் இலக்கியக் கல்வியைத் துணையாகக் கொள்ளல் என்ற வகையில் பின் பற்றப் பட்டது.

### இரசனை

அழகியல் - இலக்கியங்களினாலே மனிதன் விலங்குகளிலிருந்து வேறுபட்டு வாழத் தொடங்கினான். ஆனால் இன்று அழகியல் - இலக்கிய இரசனை அற்ற நிலையினால் விலங்கு வாழ்க்கையை மனிதன் மேற்கொள்ள ஆரம்பித்து விட்டான் என விமர்சிக்கப்படுகின்றது. இதை நீக்க இளம் பாடசாலை மாணவர்களின் ஐம்புலன்களுக்கும் இதமூட்டக் கூடிய விதமாக, அவர்களின் எண்ணங்கள், கருத்துக்கள், அறிவு என்பவற்றை தூண்டத்தக்க அழகியற் கலை இலக்கிய ஆக்கங்களின் மதிப்பினை மாணவர்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டியுள்ளது. அவற்றை இரசிக்கும் அனுபவத்தையும் வழங்க வேண்டியுள்ளது. இங்கு இரசித்தல் என்பது; யாதேனும் நிகழ்வுப் புலங்களை வருடுவதால் ஒருவருக்கு ஏற்படும் மானசீகமான திருப்தி எனச் சூட்டப்படுகின்றது. மாணவர்களின் இரசிக்கும் ஆற்றலை மேம்படுத்த;

★ பல்வேறு வகைக் கலையாக்கங்களை, இலக்கியங்களை அறிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

★ கலையாக்கங்களை புதிய இலக்கியங்களை உருவாக்க வழி காட்டல்.

★ கலையாக்கங்களை விமர்சன ரீதியாக நோக்கி பகுப்பாய்வித்தல்.

★ கலையாக்கங்களுடன் இணைந்த சமூக - இன - கலாசார - தேசிய உணர்வுகளை மதிப்பிடல்.

இவ்வாறு சிறந்த இரசனை அனுபவத்தைப் பெற்ற மாணவன் கடமையை மதிப்பவனாகவும், தேசப்பற்றாளனாகவும், சமாதானப் பிரியனாகவும், மனக் குழப்பங்கள் அற்றவனாகவும் இருப்பான். இரசனை அனுபவமானது வாழ்க்கையை பிரகாசிக்கச் செய்யும் நல்லெண்ணங்களால் உடலும், உள்ளமும் புத்துயிர் பெறுதலே இதற்குக் காரணமாகும். மாணவர்களிடம் இரசனையை ஏற்படுத்த முதலில் ஆசிரியர் கலை - இலக்கிய இரசனை உடையவராக இருத்தல் வேண்டும்.

இன்றைய எல்லாப் பாட ஆசிரியர்களும் அழகியற் கலை - இலக்கிய செயல்முறைகளில் திறமையும், திறனும் கொண்டவர்களாக வேண்டும். புதியன ஆக்குதல், பாடல்களை பாடுதல், ஆக்குதல், நடித்தல், ஆடுதல், சித்திரம் வரைதல், கட்டுரை எழுதுதல் என்பவற்றில் ஈடுபாடும், ஆக்கத் திறனும் கொண்டிருத்தல் அவசியமாகும். இவற்றை அவதானித்தல், பரிசோதித்தல், கண்டு பிடிப்புக்கள் போன்ற செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்தும் போது அவர்களுக்கும் ஆக்கத்திறன்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக ஓவியச் சுமையை நோக்கினோமானால்;

காணாதவற்றைக் காணுதலும் தெரியாதவற்றைத் தெரியப்படுத்தலும், உணராதவற்றை உணருதல் முதலானவையும் ஓவியத்தின் பண்புகளாகும். சிறந்த ஓவியம் அழகையும், கலை வலிமையையும், உருவத்தையும் உள்ளடக்கத்தையும் ஒன்றிணைக்கின்றது. இக் கலை கட்புலக்கலையாக இருந்தாலும் ஏனைய புலன்களின் அதிர்வுகளையும், சுவைகளையும் அது கட்புல வீச்சுக்குள் கொண்டு வந்து விடுகின்றது. இரு தள ஓவியங்கள் முப்பரிமாணத்தைக் காட்டுதல், வடிவமைப்பின் வழியாக ஒரு பொருளின் நறுமணத்தைப் புலப்படுத்தல், தூரிகை அசைவுகளால் ஒலியின் பண்புகளை உணர்தல் போன்ற பண்பியல்கள் ஓவியச் சுவையாக பரிணமிக்கின்றன. இக் கருத்தியல் கலைகளை - இலக்கியங்களை இரசிக்கின்றபோது ஏற்பட்ட அனுபவம் ஆக்கத்திறனாகப் பிறக்கின்றது.

### ஆக்கத்திறன்

புதியன புனைதல், ஆக்கத்திறன், புத்தாக்கம், கற்பனை செய்தல் ஆகிய சொற்கள் கலை இலக்கியங்களில் நீண்டகாலமாக இடம்பெற்று வந்துள்ளன. எமது கல்வித்துறையில் இவற்றின் ஈடுபாடு கூடுதலாக அண்மைக்காலத்திலேயே ஏற்பட்டுவருகின்றது.

ஆக்கத்திறன் தொடர்பாக பல்வேறு கல்வியலாளர்கள் பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர். மாஸ்லோ, தைரியம், துணிவு, சுயஏற்புடைமை, சுயமான இயக்கம் ஆகியன ஆக்கத்திறனில் ஒருவருக்குரிய தனிப்பட்ட சிறப்பியல்புகள் என்கின்றார். மனிதர்களில் பெரும்பாலானவர்கள் ஆக்கத்திறனுடையவர்களே, முக்கியமாக சமயல் செய்யும் பெண்ணையே மிகவும் ஆக்கத்திறனுடையவரென மாஸ்லோ குறிப்பிடுகின்றார். அவள் புதுமை, புதுப்படைப்பு, ஆக்க ஆற்றல், கண்டு பிடிப்பு ஆகிய சகல துறைகளிலும் முதன்மையானவள். பணமின்றியே கண்டுபிடிப்பு ஆகிய சகல துறைகளிலும் முதன்மையானவள். பணமின்றியே அவளுடைய வீடு எப்பொழுதும் அழகாக இருக்கும். அவளது உணவு சிறந்த விருந்து என்ற வகையில் சாதாரண வாழ்வியல் ஊடாக அழகியல் - கலை இலக்கிய உணர்வுகளை இரசித்தல் புத்தாக்கங்களுக்கு வழிகளாகும் என்கின்றார். ஆக்கத்திறனில் பின்வரும் விடயங்கள் முக்கியம் பெறுகின்றன.

புதுமை - ஆக்கப்படுவது புதுமையாக இருக்கவேண்டும். தனித் தன்மைவாய்ந்ததாகவும் அல்லது பொதுவாகக் காணப்படாத ஒன்றாகவும் இருக்கவேண்டும்.

பொருத்தமான தன்மை - தேவைகளுக்கும் விருப்புகளுக்கும் பொருந்தும் தன்மை மாற்றிப் பயன்படுத்தல் - ஒரு விடயத்தை அல்லது பொருட்களைக் கையாளும் போது அணுகுமுறையில் உண்டாகும் தீவிர இடப்பெயர்ச்சி.

சுருக்குதல் - ஒரு விடயத்தை விரிவாக அல்லது விளக்கமாகக் கூறாமல் சுருக்கமாகக் குறியீடுகள் மூலம் உணர்த்தல்.

மாணவர்களின் ஆக்கத் திறன் கலையை; அழகியற் கலை, இலக்கியங்களினூடாக விருத்தி ஆக்க ஆராய்வறிவு, விடாமுயற்சி, ஆபத்து நிலைகள் எதிர்நோக்கல், நுண்ணறிவு, கற்பனை, ஆர்வம், தடையார் சிந்தனை, சிந்தனை நெகிழ்ச்சி, புதியன புனையும் திறன், முழுமையாக்குதல் ஆகிய பண்புகளை விருத்தியாக்க வழிகளைக் காட்ட வேண்டியுள்ளது. இதற்குத் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டச் செயற்பாடுகளையே சிறப்பாகப் பயன்படுத்தலாம். இதற்கான விசேட வாண்மைத்துவப் பயிற்சிகளை எமது ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது. மேலும் பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்தியை ஊக்குவிக்கப் பின்வரும் வகுப்பறைச் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

★ வகுப்பறையை சுதந்திரமாக வைத்திருத்தலுடன் மாணவர்களை வினாக்கள் கேட்கத் தூண்டல், புத்தாக்கங்களை எழுதுவித்தல், அரங்கேற்றல்.

★ மாணவர் புதிய கருத்துக்களை, கண்டுபிடிப்புக்களை முன்வைக்கும் பொழுது அவற்றைப் பெறுமதியுடையதாக்கல்.

★ செயற்திட்ட வேலைகள் சுயவழிப்படுத்தப்பட்ட கற்றலுக்கு வழிகாட்டல் நூலகம், செயற்பாட்டறைகளை முழுமையாகப் பயன்படுத்த வாய்ப்புக்களை வழங்குதல்.

★ வழமையான பாடங்களுக்கு மேலதிகமான அழகியற் கலை இலக்கிய நிகழ்வுகளை ஒழுங்கு படுத்தல்.

★ புதிய கலைப் படைப்புக்களை புத்தாக்கங்களை மேற்கொள்வோருக்கு உயரிய கணிப்பைக் கொடுத்தல்.

**பாலசுப்பிரமணியம் தனபாலன்**
*உப பீடாதிபதி,*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*

ஒவ்வொரு மாணவர்களும் கலைஞர்களேயாவர். அழகியற் கலை இலக்கியங்களுக்கும் கலைஞனுக்குமிடையே நெருங்கிய தொடர்பு உண்டு. கலைஞன் சமூகத்தில் காணப்படும் உண்மை நிகழ்வுகளில் இருந்துதான் பெற்றுக்கொள்ளும் பலவித அனுபவங்களைக் கருத்துச் செறிவுடைய கலைவடிவமாக்கித் தருகின்றான். அவனது இரசனையும் அவன் பெற்ற அனுபவமும் அவனது ஆக்கத்தில் இருந்து இரசிகனால் கிரகித்துக் கொள்ளப்படுகின்றது. இக்கிரகித்தலே கற்றலின் மெய்ப் பெறுமானமாகும். ஆக்கமொன்றின் உள்ளும் - புறமும் உள்ள உண்மைகளும் உள்ளக்கிடக்கைகளும் வெளிப்படும் போது இரசனை அனுபவம் உயர் தத்துவமாகின்றது. இது புலனுறுப்புக்களுக்கு எட்டக்கூடிய அறிவுக்கும் தக்க ஞானத்திற்கும் அப்பாற்பட்டது. இரசனை மூலம் இரசிகன் தன் அறிவினால் மட்டுமன்றி உள்ளத்தினாலும் ஜதார்த்தத்தை அணுகுகின்றான். அந்த ஜதார்த்தம் அவனது சொந்த அனுபவமாக மாறுகின்றது. வாழ் நாளில் அறிந்து கொள்ள முடியாத உலகின் உண்மைகளை அவன் அறிந்து கொள்ளுகின்றான். □

*நன்றி கவின் தமிழ் 2003*

---

## திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆ.கு. அறிக்கையில் திருத்தம்

அரச துறை ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குவது சம்பந்தமான திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆணைக்குழுவின் அறிக்கை, திருத்தங்களுடன் முன்வைக்கப்படுமென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட உறுதியளித்துள்ளார்.

அரசாங்க சேவை தொழிற் சங்க சம்மேளனத்தின் வேண்டுகோளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கையைத் தாம் மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆணைக் குழுவிற்கான சகல அங்கத்தவர்களும் உ[illegible]ராக நியமிக்கப்பட வேண்டும் எனவும் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அரசாங்கசேவை தொழிற் சங்க சம்மேளனம் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது..

அத்துடன், கனிஷ்ட தரப்பில் உள்ள அரச ஊழியர்களுக்கு 76 சதவீத சம்பள அதிகரிப்பும் லிகிதர்கள் மற்றும் அதனோடு இணைந்த தரத்தினருக்கு 68 சதவீத சம்பள அதிகரிப்பும் நடுத்தர மற்றும் முகாமைதது மட்டத்தில் உள்ளோருக்கு 58 சதவீத அதிகரிப்பும் உயர் முகாமைத்துவப்பதவிகளில் உள்ளவர்களுக்கு 45 சதவீத அதிகரிப்பும் வழங்கப்படவேண்டும் எனவும் சம்மேளனம் கோரியுள்ளது.(உ-60.10)

---

## வட-கிழக்கில் ஒன்றேகால் இலட்சம் உள நலம் குன்றிய மாணவர்கள் இருப்பதாக ஆய்வுகள் மூலம் கண்டறிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு இலட்சத்து 25 ஆயிரம் மாணவர்களின் உள நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இம் மாகாணத்தில் 6 இலட்சத்து 80 ஆயிரம் மாணவர்கள், கல்விகற்று வருகின்றனர். இவர்களுள் 1 இலட்சத்து 25 ஆயிரம் மாணவர்கள் கடந்த காலயுத்த அனர்த்தங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இத்தகைய மாணவர்களின் நலனை மையமாகக் கொண்டு ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டு இணைப்பகம் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதனடிப்படையில், இம் மாகாணத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாணவர்களுடனான சினேகபூர்வ அணுகு முறைகள் பற்றி பயிற்சிகளை இவ்வமைப்பு வழங்கி வருவதுடன், உள நிலைத் தாக்கங்களுக்கு இலக்கான மாணவர்களை இனங்கண்டு உதவிகளை வழங்கவும் நடவடிக்கைகளை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (உ-4,61)

# புலிகள் மீதான தடையை இந்தியா நீக்க வேண்டும்

## குடாநாட்டு அமைப்புகள் கோரிக்கை

### யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாய, ஈழத் தமிழ் மக்களின் சுதந்திரமான தடைகளற்ற இயல்பு வாழ்க்கை நிலையை தமது இலட்சியமாகக் கொண்டு கடந்த இரண்டு வருடங்களிற்கு மேல்போர் நிறுத்தத்தைக் கடைப் பிடித்து சர்வதேசத்தையே ஒரு கணம் திரும்பிப் பார்க்க வைத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை நீடிப்பை இந்திய அரசாங்கம் மேற்கொள்வதை நாம் எதிர்ப்பதோடு, விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை விரைவில் நீக்கி சர்வதேசத்தில் விடுதலைப் புலிகள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட இயக்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாக வலியுறுத்துகின்றோம்.

இந்திய அரசாங்கமானது வெளியிட்ட அறிவித்தலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாகக் குறிப்பிட்டு, வெளியிட்ட விபரங்கள் உண்மைக்குப் புறம்பான மாற்றுக் கருத்துக்களைக் கொண்டுள்ளன. இலங்கையில் சமாதான முயற்சிகள் சர்வதேசத்தின் அனுசரணையோடும், நோர்வேயின் மத்தியஸ்தத்துடனும் நடை பெற்றுக் கொண்டிருககின்ற இவ் வேளையில், எமது அயல் நாடான இந்தியா விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் இரண்டு காலம் நீடித் திருப்பது வேதனைக் குரியதும், விசனத்திற்குரியதுமான நிலையை தமிழ் மக்களிடையே தோற்றுவித்துள்ளது.

இலங்கையில் சமாதான நடவடிக்கைகளிற்கு இந்தியாவின் பங்களிப்பு அவசிமானது. இது ஈழத் தமிழர்களின் எதிர்பார்ப்பு. அது மட்டுமல்லாமல் தமது பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில், இந்தியா தனது முற்று முழுதான பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்த எம் மக்களுக்கு இந்திய அரசின் அறிவித்தலானது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலையை தோற்றுவித்துள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமோக வெற்றியும் விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற சர்வதேச அரங்கிலே எடுத்து விளக்குகின்றது. தமிழகத்தைப் பொறுத்த வரையிலும், ஈழத் தமிழர் ஆதரவு கூட்டணியின் வெற்றியும் இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒரு அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீதான தடையை இரண்டு ஆண்டுகள் நீடித்தமையினை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சர்வதேசமே விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு அங்கீகாரம் வழங்குகின்ற இவ்வேளையில், இந்திய அரசாங்கமானது இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கதும், வேதனைக்குரியதுமாகும். இந்த முடிவை மாற்றி இதனை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

### உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம்

தமிழ் மக்களதும், மாணவர்களதும், உரிமைகள் சிங்கள தேசத்தாலும் அதன் ஆட்சியில் இருக்கும் தலைவர்களாலும் காலத்துக்குக் காலம் நசுக்கப்பட்டு வந்தபோது, எமது தமிழினத் தலைவர்கள் அகிம்சை வழியில் போராடினார்கள். தமது பாராளுமன்றப் பதவிகளைக் கூடத்துறந்தார்கள். ஆனால், எதனையும் அடைய முடியவில்லை. இந்நிலையில் தான் தமிழ்த் தேசிய இனம் தேசியத் தலைவர் பிரபாகரனின் தலைமையில் ஆயுதரீதியான போராட்டத்தை ஆரம்பித்தது.

சிங்களத் தலைவர்களால் தமிழ் மககள் பல வழிகளில் அடக்கியும், ஒடுக்கியும் உரிமைகள் மறுக்கப்பட்டபோது, அதற்கு எதிராக எழுந்த ஆயுதப் போராட்டமானது இன்று அழிக்கப்பட முடியாத சக்தியாக உருவெடுத்துள்ளது.

இந்நிலையில், இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசி அவர்களுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதுடன், தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும என்ற நிலைப்பாடு சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ளது.


எமது போராட்டமானது தீவிரமடைந்த காலப் பகுதியில் இந்தியாவுடன் சில கசப்பான உணர்வுகள் ஏற்பட்டு இருக்கலாம். ஆனால், இன்று அந்த நிலை மாறி விடுதலைப் புலிகளும் தமிழ மக்களும் இந்தியாவை ஒரு நேச சக்தியாகக் கருதிச் செயற்படுகின்ற வேளையில், இந்தியாவின் இந்தத தடை நீடிப்பானது தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகுந்த வேதனையளிக்கும் விடயமாகும்.


விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியாகப் பலமடைந்துள்ள நிலையில் அவர்களுக்கு அரசியல் ரீதியாகவும் பலத்தினைக் கடந்த தேர்தல் மூலம் அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட்ட போது தமிழ் மக்களாகிய நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தோம். இந்த அரசியல் மாற்றமானது தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத்தரும் என்று நம்பினோம்.


ஆனால், அவ்வாறு நாங்கள் கருதியதற்கு மாறாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையானது மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாட்டின் மூலம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு இந்திய அரசு குந்தகம் விளைவித்துள்ளது. எனவே, இந்திய அரசு இந்த முடிவினை மீள் பரிசீலனை செய்து விடுதலைப் புலிகள் மீதான தடையினை நீக்கி தமிழ் மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.









புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் ஹரிம் பீரிஸ் நேற்றைய தினம் யாழ்.செயலகத்திற்கு விஜயம் செய்த போது பிடிப்கப்பட்ட படங்கள்.

படங்கள் : ப.ஜங்கரன்

# ஜனாதிபதியின் ஆலோசனையில் இராணுவ சேவை அதிகாரசபை

(கண்டி)



இராணுவ வீரர்களின் நன்மை கருதி சிறந்த திட்டங்களை அமுல்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கண்டியில் இடம்பெற்ற இராணுவ வீரர்களுக்கான கொடித் தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைத தெரிவித்தார்.

நாட்டின் இறைமையையும், மக்களின் நலனையும் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் இராணுவத்தினரின் நலன்களைப் பாதுகாப்பதற்கான விசேட திட்டங்கள் எதுவும் இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

இதனால், இராணுவ வீரர்களுக்குரிய விசேட சலுகைகளையும், திட்டங்களையும் நடைமுறைப்படுத்த தான் முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதன் கீழ் இராணுவ வீரர்களின் குடும்ப நல மேம்பாடுகளுக்காக வீடமைப்பு கடன், மானிய உதவிகள், சம்பள அதிகரிப்பு, சுயதொழில் வாய்ப்புகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறான திட்டங்களைச் சிறந்த முறையில் அமுல்படுத்துவதற்கும், கண்காணிப்புக்களைச் செய்யவும் இராணுவ சேவை அதிகார சபை ஒன்றையும் தான் நிறுவி உள்ளதாகவும் இதற்குரிய சகல அதிகாரங்கள் மற்றும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-4,61)

## கூட்டுறவு தின போட்டி

(தாவடி)

82 வது சர்வதேச கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினர், யாழ்.மாவட்ட பாடசாலைகளின் தரம் 10 தொடக்கம் தரம் 13இல் கல்வி பயிலும் மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, சித்திரம், வினாவிடைப் போட்டிகளை நடாத்தவுள்ளனர்.

எதிர்வரும் ஜூன் 9ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அதிபரின் உறுதியுடன் அனுப்பி வைக்குமாறும், மேலதிக விபரங்களை வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கூட்டுறவுச் சபையில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-112)



யாழ். வந்த உலக உணவு ஸ்தாபனப் பிரதிநிதிகள் செயலகத்தில் நேற்று நடத்திய கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட படம்.

படம : ப.ஜங்கரன்

**இந்தியப் பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியான கையோடு, இந்தியப் பிரதமராகக் காங்கிரஸ் கட்சியின் தலைவியான திருமதி சோனியா காந்தி வரக்கூடும் என்று கருதப்பட்டவேளை அதாவது 17.05.2004அன்று அவுஸ்திரேலிய மெல்பேர்ன் நகரில் தமிழ்க்குரல் வானொலி நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகிய கட்டுரையாகும்.**

**தற்போது இந்தியப் பிரதமராக மன்மோகன் சிங் பதவி ஏற்றிருப்பதுடன், விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்திய அரசு மேலும் 2ஆண்டுகள் நீடித்திருப்பதையும் வாசகர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். இங்கே வந்திருக்கின்ற கருத்துக்கள் பொருத்த முடையவையாக இருக்கின்ற காரணத்தினால் இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

# ஈழத் தமிழர் குறித்த இந்தியாவின் நிலைப்பாடு என்றும் மாறாது

சபேசன்

இந்தியப் பொதுத்தேர்தலின் பெறுபேறுகள் கொண்டு வந்துள்ள ஆட்சி மாற்றம், பலருடைய புருவங்களை உயர்த்தியுள்ளது. திருமதி சோனியா காந்தியின் தலைமையிலான காங்கிரஸ் கூட்டணி, அறுதிப் பெரும்பான்மையினை பெறாது விட்டாலும், அதிகூடிய பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதாகத் திகழ்கின்றது. கம்யூனிஷ்ட் மற்றும் சில வட இந்திய அரசியல் கட்சிகளின். ஆதரவுடன் காங்கிரஸ் கட்சிக் கூட்டணியே இந்தியாவின் புதிய அரசாங்கத்தை அமைக்கக்கூடிய இந்தச் சூழ் நிலையில், எம்மவர்கள் மத்தியில் குறிப்பாகப் புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் மத்தியில் - ஒரு கேள்வி பெரிதாக எழுந்துள்ளதை நாம் காண்கின்றோம். இந்தக் கேள்வியானது இலங்கைப் பத்திரிகைகள் ஊடாகவும் இணையத்தளங்கள் ஊடாகவும் பூதாகரமாகப் பெரிதுபடுத்தப்பட்டு வருவதையும் நாம் அவதானிக்கின்றோம்! இன்றைய தினம் இந்தக் கேள்விக்குரிய பதிலைத் தெரிந்து கொள்வதிலேயே எம்மவர்களில் பலர் தங்கள் மூளைகளைக் கசக்கிப் பிழிந்து களைத்துப் போவதையும் நாம் கவனிக்கின்றோம்.

## விமோசனம் கிடைக்குமா

திருமதி சோனியா காந்தி புதிய அரசு ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு - விடிவை விமோசனத்தைப் பெற்றுத் தருமா? என்ற கேள்விக்குரிய - அல்லது எதிர்பார்ப்புக்குரிய அல்லது அங்கலாய்ப்புக்குரிய பதிலை இன்று எம்மவர்களில் பலர் எதிர்பார்த்து 'ஏங்கியிருப்பதனை உலக ஊடகங்கள் ஊடாக நாம் அவதானிக்கக் கூடியதாக இருப்பது என்னவோ உண்மைதான்!

இந்தக் கேள்விக்குரிய பதிலைத் தேடுவதற்கு முதல் இந்தக் கேள்வியே அவசியம் தானா? என்ற வினாவிற்கு விடை தேடுவது தான் எமக்கு முக்கியமானதாகப் படுகின்றது. அதன் அடிப்படையில் இவ்விடயத்தைத் தர்க்கிப்பதோடு மட்டுமல்லாது வேறு சில கருத்துக்களையும் முன் வைத்து விவாதிக்க விளைகின்றோம்.

## அடிமைச் சிந்தனை

ஆயிரக்கணக்கான ஆண்டு காலமாக அடிமைப்பட்டு வாழ்ந்த காரணத்தினாலோ என்னவோ எம்மில் பலரின் மரபணுக்களில் அடிமைச் சிந்தனை என்பது வேரோடிப் போய்விட்டது என்று எண்ணி வருந்தச் சிந்திக்கின்றோம். உள்ளூரோ, வெளிநாடோ, வெளியூரோ, வெளிநாடோ எதுவாக இருந்தாலும் அந்த நாடுகளில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் எமது ஈழத் திருநாட்டிற்கு உதவுமா அல்லது உதைக்குமா என்று எண்ணி அங்கலாய்ப்பது மட்டும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

தமிழீழ விடுதலைப் போரட்டம் எத்தனையோ சோதனைகளையும், வேதனைகளையும், திருப்புமுனைகளையும், தியாகங்களையும் சந்தித்துத்தான் முன்னேறி வந்திருக்கின்றது - வருகின்றது. அன்று ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட எம்மின மக்கள் ஓர் இரவில் அகதிகளாக அல்லல் உற்று இடம்பெயர்ந்தபோது எந்த உலக நாடும் உதவிக்கரம் நீட்டி ஓடி வரவில்லை. ஆனால் இன்றோ ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகள் நிதியுதவி செய்வதற்காக தமிழீழத்தின் கதவுகளைத் தட்டி நிற்கின்றன. தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்கும்படி சிறிலங்கா அரசை இந்த நாடுகள் இன்று வற்புறுத்தி நிற்கின்றன.

## மனமாற்றம்

இன்று இவ்வாறு உலக நாடுகள் பலவற்றில் ஏற்பட்டுள்ள மன மாற்றத்திற்குக் காரணம் என்ன? அந்த நாடுகளில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களா? இல்லை இல்லவே இல்லை! அதற்குரிய அடிப்படைக காரணமும் முதன்மைக் காரணமும் தமிழீழத்திலே தான் உள்ளது. தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னின்று நடாத்திச் செல்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று மிகப்பெரிய பலம்மிக்க சக்தியாகச் செயல்பட்டு வருகின்றது. இன்றைய தினம் இராணுவப் பலமும் அரசியல் பலமும் ஒருங்கே கொண்டதொரு விடுதலை இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் திகழ்கின்றது. தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை, சுதந்திரப் போராட்டத்தை இனிமேல் ஒடுக்கவோ தடுக்கவோ முடியாது என்ற யதாத்த நிலையை இன்று சிறீலங்கா அரசு மட்டுமல்ல, அதற்கு ஆதரவாகச் செயல்பட்ட உலக நாடுகளும் உணர்ந்து நிற்கின்றன. அதன் அடிப்படையிலேயே இந்த மன மாற்றத்திற்கான காரணிகளை நாம் சிந்திக்க வேண்டும்.

ஆகவே, இலங்கையில் அரசுகள் மாறினாலும் சரி, இந்தியாவில் அரசுகள் மாறினாலும் சரி, உலக நாடுகளில் அரசுகள் மாறினாலும் சரி, இல்லை செவ்வாய்க் கிரகத்திலும் ஏதேனும் மாற்றங்கள் வந்தாலும் சரி தமிழீழம் பலமாக இருக்கும் வரையில் அவை பாதிப்பைத் தரப்போவதில்லை என்பதே நிதர்சனமாகும். மாறும் போது பொதுவாக அந்த நாட்டின் வெளிவிவகாரக் கொள்கைகளில் பெரிதான மாற்றங்கள் ஏற்படுவதில்லை என்பதுதான் உண்மை! அதிலும் அந்த நாடு ஒரு வல்லரசாக இருக்கும் பட்சத்தில் அந்த நாட்டின் வெளிவிவகாரக் கொள்கைகளில் மாற்றம் ஏற்படுவது அரிதான விடயமாகவே இருக்கும். எனினும் அண்டை நாடான இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைகளை நாம் அரசியல் ரீதியாக மட்டுமல்லாது புவியியல், பொருளாதாரவியல் ரீதியாகவும் கவனித்துச் சிந்திக்க வேண்டும்.

## அன்புக்குரிய மாமியார்

திருமதி சோனியா காந்தியின் அன்புக்குரிய மாமியார் திருமதி இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் அவா தமிழ்ப் போராளி இயக்கங்களுக்கு ஆதரவும் இராணுவப் பயிற்சியும் கொடுத்து வந்தார் என்பது வெளிப்படையான இரகசியமாகும். அத்துடன் அன்றைய சிறிலங்கா அரசு தமிழீழ மக்கள் மீது மேற்கொண்ட அரச பயங்கரவாத இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக இந்திரா காந்தி அறிக்கைகள் வெளியிட்டு வந்ததோடு, சிறிலங்கா அரசு மீது அரசியல் அழுத்தத்தையும் பிரயோகித்து வந்தார். இந்திரா காந்தியின் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக தமிழீழ மக்கள் அவர்மீது மிகுந்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தார்கள்.

அப்படியென்றால், அன்று இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் இருந்த இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைக்கும் பின்னாளில் இந்தியா கொண்டிருக்கும் வெளிவிவகாரக் கொள்கைக்கும் (முக்கியமாக ஈழத் தமிழ் மக்கள் பிரச்சினையில்) வித்தியாசம் இருக்கின்றதே என்ற கேள்வி எழுவது இயல்பானதாகும். ஆனால் கூர்ந்து சிந்தித்துப் பார்த்தால் இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படை நோக்கத்தில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்ற உண்மை புலனாகும்.

அன்றைய ஜே.ஆா ஜெயவர்த்தனாவின் அரசு - இந்திய எதிர்ப்புப் போக்கைக் கொண்டிருந்ததோடு மட்டுமல்லாது பாகிஸ்தான் சீனா - அமெரிக்கா போன்ற நாடுகளுடன் நெருங்கிய நட்புறவைக் கொண்டிருந்தது.

இந்திரா காந்தியின் அரசோ, அன்று வல்லரசாகத் திகழ்ந்த சோவியத் ரஷ்யாவுடன் மிகுந்த நட்புறவைக் கொண்டிருந்தது. இதன் காரணமாக அமெரிக்கா போன்ற நாடுகளின் தலையீடும், செல்வாக்கும் இலங்கையில் அதிகரித்து வருவதைத் தனக்கு ஓா அச்சுறுத்தலாகவே அன்றைய இந்திய அரசு கருதியது. அந்த வேளை யில் இலங்கை விவகாரத்தில் தன்னுடைய மூக்கை நுழைப்பதற்கு இந் தியாவிற்குக் கிடைத்த வரப் பிர சாதமாக ஈழத்தமிழர் பிரச்சினை விளங்கியது. அதனைப் பயன் படுத்தும் முயற்சியில் இந்திரா காந்தி இறங்கி, தமது பிராந்திய மேலாண்மையை நிலை நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

## தமிழர் போராட்டம

'ஈழத்தமிழர் போராட்டமானது, ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசிற்குத் தீராத தலையிடியாக உருவாகுவதன் மூலம் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு இந்தியாவின் உதவியை நாடி வரவேண்டும் என்றே இந்திரா காந்தி விரும்பினார். அதுவே உண்மையுமாகும். திருமதி இந்திரா கொலை செய்யப்பட்ட சில மாதங்களின் பின்பு அவருடைய அரசியல் வாழ்க்கைச் சரிதம் குறித்த ஒரு புத்தகம் வெளிவந்தது. அதனை எழுதியவர் இந்திரா காந்தியின் தனிப்பட்ட செயலாளா ஆவார். அவர் இலங்கை அரசு குறித்தும், தமிழர் பரச்சினை குறித்தும், தமிழ்ப் போராளி இயக்கங்கள் குறித்தும் இந்திரா காந்தி கொண்டிருந்த சிந்தனைகளை விபரித்து எழுதியுள்ளார். அவா எழுதியிருந்த விடயங்களில சிலவற்றையே நாம் இப்போது சுட்டிக் காட்டியிருந்தோம்.

தவிரவும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் குறித்து இந்திரா காந்தி கொண்டிருந்த கணிப்பையும் அவரது தனிப்பட்ட செயலாளா தன்னுடைய நூலில் அன்றே குறிப்பிட்டிருக்கின்றார். ஏனைய தமிழ்ப் போராளிக் குழுக்களையும் விட, தமிழீழ விடுதலைப புலிகளின் இயக்க உறுப்பினர்கள் தனித்துவமாக வும், கொள்கைப் பிடிப்பு உள்ள வர்களாகவும், கட்டுக் கோப்பாகவும் உள்ளார்கள். எதிர்காலத்தில் புலிகள் இந்தியாவின் அழுத்தத்திற்குப் பணிய மாட்டார்கள். ஏனென்றால், விடுதலைப் புலிகள் இயக்கம், தன்னுடைய இலட்சியத்தில் உறுதி கொண்ட இயக்கமாக வளர்ந்து வருகின்றது. மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் எண்ணங்களை தனிப்பட்ட செயலாளா தன்னுடைய நூலில் எழுதியுள்ளார்.

எனவே தன்னுடைய பிராந்திய மேலாண்மை கருதியும், பொருளாதார முன்னேற்றம் கருதியும் இந்தியா இடப் பக்கமும் சாயும், வலப்பக்கமும் சாயும்! அப்படி இந்தியா எப்பக்கம் சாய்ந்தாலும் அதில் இந்தியாவின் நலனுக்கே முன்னுரிமை இருக்கும். அதுவே இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படைவாதமுமாகும்.

## சம பங்காளிகள்

அந்தத் தர்க்கத்தின் அடிப்படையிலேயே இந்தியாவின் எதிர்கால நடவடிக்கைகளை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். இன்று இலங்கைத்தீவின் அரசியல் - இராணுவக் களங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசும் சம பங்காளிகளாக இருக்கும் நிலை உருவாகியுள்ளது. தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்கின்ற உண்மை இன்று நிருபிக்கப்பட்ட விடயமாகிவிட்டது. இந்த நிலையில் தன்னுடைய வெளிவிவகாரக் கொள்கையை இந்தியா எவ்வாறு கையாளப் போகின்றது என்பதே இப்போதைய எதிர்பார்ப்பாகும்.

மதவாதத்தை முன்வைத்து ஆட்சி நடாத்திய முன்னைய அரசான ஜே.வி.பி. கூட்டணி, ஈழத்தமிழர் நலனுக்கு எதிராகச் செயற்பட்டதை நாம் அறிவோம். இலங்கைத் தீவின் அரசியல் களம் இந்த ஏப்பிரல் மாதம் மாற்றம் அடைந்துள்ள இந்த வேளையில், மேமாத மாற்றத்தோடு அரசுக்கு வரும் சோனியா காந்தியின் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி இலங்கைப்பிரச்சனையில் நேரடியாக தலையீடு செய்யாமல், மறைமுகமான பங்களிப்பனை செய்யக்கூடும் என்பதே இப்போதைய நோக்காக இருக்கின்றது.

சோனியா காந்தியின் காங்கிரஸ் கட்சியோடு, தமிழகத்து திராவிடக்கட்சிகள் தோதல் கூட்டு வைக்கும் காலம் எதிர்காலத்தில் ஏற்படலாம் என்று நாம் 2002ஆம் ஆண்டு கூறியபோது, அதனை ஏற்க மறுத்துப் பல வலுவான காரணிகளை அன்பர்கள் பலர் எமக்குக் கூறியிருந்தார்கள். ஆயினும், அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தர எதிரிகளும் இல்லை என்பதையே, இந்த வெற்றி பெற்ற கூட்டணி நிருபித்து நிற்கின்றது. இதன் அடிப்படையிலேயே, சோனியா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைத்தால், இலங்கைப் பிரச்சினை குறித்த இந்திய அணுகுமுறை எவ்வாறு இருக்கும் என அன்று தர்க்கித்திருந்தோம்.

இந்தக் கருத்துக்களைப் பின்புலமாக வைத்துக்கொண்டு, ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமரின் தற்போதைய அறிக்கைகளை நாம் கவனத்தில் கொள்ள விளைகின்றோம். அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில், கதிர்காமர் கூறிய சில கருத்துக்கள், அரசின் நம்ப கத்தன்மை குறித்து மீண்டும் சந்தேகத்தை எழுப்பியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சமாப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் அமுலாக்கம் குறித்தே பேச்சு வார்தைகளின் முதல்கட்டம் அமைய வேண்டும் - என்ற எதிர்பார்ப்பில் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வேளையில், கதிர்காமா இத்தன்னாட்சி அதிகாரசபைத திட்டம் குறித்து, காட்டமான கருத்துக்களைத் தொவித்துள்ளாா. இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத்திட்டத்தை ஏற்பது, ஸ்ரீலங்கா போன்ற இறையாண்மையுள்ள நாட்டிற்குக் கடினமான ஒன்றாகும். எதிர்காலத்தனியரசு ஒன்றிற்கான திட்டந்தான் இது - என்று கதிர்காமர் கூறிய கருத்து, சமாதானப் பேச்சு முயற்சிகளில் அவநம்பிகையை ஏற்படுத்துவதாக உள்ளது.

## நாடு கடத்தல்

அது மட்டுமல்லாது, சோனியா காந்தி பிரதமராக வரும்பட்சத்தில், தலைவா பிரபாகரனை நாடு கடத்தும் கோரிக்கையை இந்தியா முன்வைக்கக் கூடும் என்ற கருத்துப்பட கதிர்காமா பேசியுள்ளார். இந்தியத் தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்னரேயே அவசர அவசரமாக ஜே.வி.பி. அரசைச் சந்தித்து ஸ்ரீலங்கா அரசுக்கான ஆதரவைக் கோரிவந்தவர் தான் கதிர்காமா. இன்று இந்திய அரசாங்கத்தை சோனியா காந்தியின் அரசியல் கூட்டணி அமைக்கப்போகின்ற நிலையில், தமிழர்களுக்கு எதிராக இந்தியாவை நோக்க வைக்கின்ற முயற்சியில் கதிர்காமர் ஈடுபட்டுள்ளார்.

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையானது தற்போதைய காலகட்டத்தில் இலங்கைப்பிரச்சினையை எவ்வாறு அணுகக் கூடும் என்று நாம் இப்போது முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் கதிர்காமரின் இந்த 'நாடு கடத்தும்' புரளியை நாம் சிந்திக்க வேண்டும். இந்திய ஆட்சி மாறிய உடனேயே இப்படிப்பட்ட குழப்பத்தை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் கதிர்காமருக்கு ஏற்பட்டிருப்பதனை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்திய அரசின் நிலைப்பாடு மாறப்போகின்றது என்ற உள்ளுணர்வுதான் இவ்வாறு கதிர்காமரை அவசரப்படுத்தியதோ என்னவோ?

முன்பு ஆட்சியிலிருந்த ஜே.வி.பி அரசானது ஒரு மதவாத அரசாக விளங்கியது. இப்போது இங்கு ஆட்சி அமைத்துள்ள அரசும் ஒரு மதவாத அரசாகும். மதங்கள் வேறுபட்டதாக இருந்தாலும் அடிப்படை மதவாதக் கொள்கையிலும் தீவிரத்திலும் இவை ஒத்துப்போகக் கூடியவை. முதலாளித்துவமும், முதலாளித்துவமும் ஒத்துப் போகின்றதுபோல் மதவாதமும் தனக்குள் ஒத்துப் போகும்.

ஆனால, சோனியா காந்தியின் காங்கிரஸ் கூட்டணி அமைக்கவிருக்கும் ஆட்சி மதசார்பற்ற அரசாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. தவிரவும் விடுதலைப் புலிகளின இடைக்கால தன்னாட்சி அதிகார சபையும், எந்த மதத்திற்கும் முதலிடம் வழங்கப்படமாட்டாது என்றே குறிப்பிட்டு நிற்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று இராணுவப் பலமும் அரசியல்பலமும் பொருந்தி, அரசோடு சமபங்காளியாக இருக்கும் நிலை உருவாகியுள்ளது. இப்படியான நிலை விடுதலைப் புலிகளுக்கு சாதகமாக இருப்பதனை உணர்ந்து கொண்ட கதிர்காமரின் மூளை, இப்போது முன்னைவிட அதிகமாக செயற்படத் தொடங்கியிருக்கிறது போலும்!

இன்றைய யதாத்த நிலையை சாியாகப் புரிந்து, அதற்கேற்ற தகுந்த நடவடிக்கைகளை சோனியா காந்தியின் அரசு எடுக்குமென்று நாமும் உளமார விரும்புகின்றோம். இந்த அணுகு முறையானது சோனியா காந்தியின் தமிழக செல்வாக்கை அதிகரிக்கச் செய்வதோடு, ஈழத் தமிழர்களோடும் ஓர் எழுதப்படாத புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உருவாக்கும். கதிர்காமர் போன்றோர் ஏற்படுத்தும் சலசலப்புகளுக்கு இந்தியா மட்டுமல்ல புலம் பெயர்ந்த தமிழீழத்தவர்களும் இடம்கொடுக்கக் கூடாது என்பதே எமது அவா ஆகும்

## இன்று ஒரு தகவல்

# எதற்கு முதலிடம்?

அன்று காலையில் அந்தக் கடைக்குள் நுழைந்த அனைவருக்கும், முதன் முதலில், ஒரு விசித்திரமான அனுபவம் காத்திருந்தது. விலைகள் எல்லாம் தலைகீழாக இறங்கியிருக்கிறதா, என்ன என்று ஸ்தம்பித்து நின்றனர். அதற்கான காரணமும் இல்லாமலில்லை! குளிர் பதனப்பெட்டியின் விலை ரூபா 10 என்று போடப்பட்டிருந்தது. விலை மதிப்புள்ள கோட்டுகள் ரூபா 2அல்லது ரூபா5 என்று விலை குறிக்கப்பட்டிருந்தன. அடுத்த வரிசையில் வந்த போது தான் இன்னொரு விதமான அதிர்ச்சி தாக்கியது. ஆம் பல்துலக்கும் பசையின் விலை ரூபா 500 என்றும் ஒரு கண்ணாடித் தம்ளரின் விலை ரூபா 6000 என்றும் போடப்பட்டிருந்தது. செய்வகையறியாது, தொடர்ந்து நடந்து அடுத்த பகுதியை அடைந்த போது, அங்கு கலர் டெலிவிஷனின் விலை ரூபா5 என்று போடப்பட்டிருந்தது. இப்பொழுது சற்று புரிய ஆரம்பித்தது, யாரோ ஒருவர்- அந்தக் கடைக்கு வேண்டாத ஒருவர்- விஷமம் செய்து விட்டுப் போயிருக்கிறார்! ஒவ்வொன்றிலும் ஒட்டப்பட்டிருந்த விலைச் சீட்டை எடுத்து, மற்றவைகளில் ஒட்டி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்!

அந்த நபர் செய்த காரியம் கடையில் மிகுந்த குழப்பத்தை உண்டு பண்ணியது. விலை மதிப்புள்ள பொருட்களில் குறைந்த விலை போடப்பட்டிருந்தது. விலை குறைந்த பொருட்களோவெனில் அதிக விலையைத் தாங்கி நின்றன. கடை முதலாளி விலைப் பட்டியலைப் பார்த்து சற்று நேரம் எடுத்து, ஒவ்வொன்றின் விலையைச் சரிப்படுத்தும் வரைக்கும், வியாபாரம் நின்று போயிற்று.

இது ஒரு வேடிக்கையான சம்பவம் தான். இல்லையென்று சொல்வதற்கில்லை. ஆனால் அதில் வேதனையும் ஊடறுத்துக் கொண்டு செல்வதைக் காண்கிறோம் அல்லவா? நமது குடும்பங்களும் இதைப்போன்ற நிலையில் காட்சியளிக்கின்றனவா? விலைச்சீட்டு மாற்றச் சம்பவம் போன்று முக்கியமற்ற காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, முக்கியமான காரியங்களை முக்கியமற்றவையென ஒதுக்கி வைத்திருக்கிறோமா? நமது வீடுகளில் எதற்கு சிறப்பிடம் கொடுக்கிறோம்?

எல்லாவற்றிலும் சற்று வரிசைக்கிரமமாக வைத்துப் பாருங்கள். இறைவனா? மனைவியா அல்லது கணவனா? குழந்தைகளா? நண்பர்களா?- உங்களது உத்தியோகமா? உடைகளா? டெலிவிஷனா? காரா? உங்களது வெளியுலக வாழ்க்கையா? இதுபோன்ற இனனும் பல காரியங்களையும் விசைப்படுத்திப் பாருங்கள். எக்காரியங்கள் 'சிறப்பிடத்தைப் பெறுகின்றன? எக்காரியங்கள் ஒதுக்கி வைக்கப்படுகின்றன?

சில குடும்பங்களில் ஆண்கள், ஏன் பெண்களும் தான் எதற்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும், எது முதலாவது செய்யப்பட வேண்டும் என்பதை சரியாகப் புரிந்து கொள்ளாததினால் வாழ்வில் எப்பொழுதும் ஏமாற்றத்தையே சந்தித்து வருகிறார்கள்.

எனக்குத் தெரிந்த கணவனும் மனைவியும் ஒரு பள்ளியில் வேலை செய்து வருகிறார்கள். இருவருமே பட்டதாரிகள். எத்தனையோ ஆண்டுகளாகப் பள்ளியில் ஆசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றார்கள். எனினும் இவர்களுக்கு எத்தனையோ ஆண்டுகட்குப் பின்வந்த ஆசிரியர்களுக்கு பொறுப்புள்ள பதவிகள் கொடுக்கப்பட்டு பிரமோஷன் பெற்றுப் போய்விட்டார்கள. ஏன் அப்படி?

இந்தக் கணவனும் மனைவியும் வாழ்வில் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதை இன்னும் அறியாதவர்கள். அதுதான் காரணம். ஊர்ந்து ஊர்ந்து வீட்டில் வேலை செய்து விட்டு, பள்ளிக்கும் பிந்தியே செல்கின்றார்கள். கொடுக்கப்பட்ட வேலைகள் சரியான நேரத்தில் முடிப்பதில்லை. வகுப்பில் சரியாகப் பாடங்களைக் கற்றுக்கொடுப்பதில்லை. பிரமோஷன் இவர்களைத் தேடிக் கொண்டு வர அதற்குப் பயித்தியமா என்ன? இவர்கள் வாழ்விலே தோல்வியையே தழுவிக்கொண்டிருப்பார்களானால் அதற்குக் காரணம் வேறு யாருமில்லை அவர்களே தான்! எதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை அறியாதவர்கள்.

குடும்பத்திற்கு வேண்டிய தரமான ஊட்டச் சத்துள்ள உணவைச் சமைத்துப் போடாமல், காசை மிச்சம் பிடித்து, நகை வாங்கிப் போட்டு மினுக்குகின்ற பெண்களும் இருக்கத்தான் செய்கிறாக்ள்!

இன்று வாழ்க்கையில் முன்னேறாமல் தோல்வியையே சந்தித்துக் கொண்டிருக்கின்றோமானால் அதற்குக் காரணம் வேறு யாரும் இல்லை, நாம் தான்.

உங்களது வாழ்வில் யாருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்ற காரியத்தை சற்று சிந்தியுங்கள். இவ்வாறு சிந்தித்துச் செயல்படுவீகளானால், உங்களது வாழ்வில் வியத்தகு மாறுதல்கள் நிகழக் காண்பீர்கள். வாழ்வு முனைனப்போல் இழப்புகளால் நிறைந்திருக்காமல், சிறப்புகளால் நிறைந்திருக்கக் காண்பீர்கள்.

*கமலா ஜெகதீசன்*

# பட்டினிச் சாவில் இருந்து யாழ்.மக்களைக் காப்பாற்றுக!

## ஹரிம் பீரிஸிடம் பொது அமைப்புகள் மகஜர்

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு மாதங்களாக யாழ்.மாவட்டத்தில் உலர் உணவு நிவாரணம் வழக்கப்படவில்லையாதலால் இது தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுத்து பட்டினிச் சாவிலிருந்து மக்களைக் காப்பாற்றுமாறு யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் புனர்வாழ்வு, புனரமைப்பு நிவாரண அமைச்சின் ஆணையாளர் நாயகம் ஹரிம் பீரிஸைக் கேட்டுள்ளது.

நேற்றைய தினம யாழ். செயலகத்தில் வைத்து பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளைக் ஹரிம் பீரிஸ சந்தித்துக் கலந்துரையாடிய வேளை மேற்படி கோரிக்கை அடங்கிய மனகஜர் கையளிக்கப்பட்டது.

அம மகஜரில் மேலும், நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை காலமும் உலர் உணவு வழங்கப்பட்டு வந்தது. இந்த விநியோகத்தை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கஙகளே மேற்கொண்டு வந்தன. ஆயினும், தற்போது உலர் உணவு பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பாதிப்புற்றுள்ள மக்கள் மேலும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

பல்வேறு அழிவுகளையும், இழப்புக்களையும் சந்திதத யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு எந்த விதமான உதவிகளும் இதுவரை கிடைக்கவில்லை. புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியமர்வு போன்ற விடயங்கள் எல்லாம் செயலிழந்து இருக்கின்றன. இம் மக்களுக்கு இதன் மூலம் எந்தவிதமான பிரயோசனமும் ஏற்படவில்லை என்பதை தங்கள் மேலான கவனத்திற்கு சுட்டிகாட்ட விரும்புகின்றோம்.

யுத்த நெருக்கடி காரணமாக தொழிலின்றி வருமானமின்றி, பசி, பட்டினியுடன் அவல வாழ்வை அனுபவிக்கும மக்களுக்கு வேறு எவ்வித ஆதாரமுமில்லை என்பதை தங்கள் கவனத்தில் கொள்வது மிகவும் பயனுள்ளதாக அமையும் என எதிர்பாக்கின்றோம்.

போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ள போதும் இன்னமும் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவில்லை. போர்ச் சூழலே தொடர்ந்து காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அனைத்து நிவாரணங்களும் வழங்கப்பட்டு,மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரை தொடர்ந்து வழமைபோல் இலவச உலர்உணவு தொடர்ந்தும் வழங்கப்பட ஆவன செய்யப்படவேண்டும் என்பதை பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக வலியுறுத்துகின்றோம் என்றுள்ளது.

இதேவேளை, வலி வடக்கு பொது அமைப்புக்களின ஒன்றியம், யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம், ஸ்ரீ மகா விஷ்ணு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மறவன்புலோ மத்தி பாரதி சனசமூக நிலையம்,யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியனவும் இவ் விடயம் தொடர்பில் தம் நிலைப்பாட்டை விளக்கி ஹரிம் பீரிஸிடம் மகஜர்களைக் கையளித்தன. (உ-19)

## புகைப்பட பிரதிகள் பற்றி விசாரணைகள் நடத்தப்படும்

(கொழும்பு)

பிரதேச சபையில் உள்ள கொழும்பு மாநகர சபையின் இயந்திரப் பகுதிப் பிரிவில் கண்டு பிடிக்கப்பட்ட சட்ட ஆவணங்களின் புகைப்படப் பிரதிகள் தொடர்பாக நீதிபரிபாலன சேவைகள் ஆணைக் குழு விசாரணைகளை நடத்தவுள்ளது. நீண்டகாலமாக கொழும்பு மாநகரசபையின் இயந்திரப்பகு தியில் போதைப்பொருள் விற் பனை செய்யபட்டு வந்ததைக் கண்டுபிடித்து அண்மையில் தேடுதல் நடத்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள், அங் கிருந்து பெருமளவு போதைப் பொருள், வெடிகுண்டு மற்றும் சட்ட ஆவணங்களின் போட்டோ பிரதிகள் என்பவற்றைக் கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து, சம்பந்தப்பட்ட சட்ட ஆவண புகைப்படப் பிரதி குறித்து நீதி பரிபாலன சேவைகள் ஆணைக்குழு விசாரணைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. (உ-60,10)

## நாளொன்றுக்கு 250 விசாக்களை வழங்க குவைத் தூதரகம் முடிவு

(கொழும்பு)

நாளொன்றிற்கு 200 தொடக்கம் 250 வரையிலான விசாக்களை வழங்க இலங்கைக்கான குவைத் நாட்டுத் தூதரகம் முடிவு செய்துள்ளது.

குவைத்தில் பணிபுரியும் இலங்கையர்களின் நலனைப் பேணுவதற்கு குவைத் அரசினால் விசேட குழு, ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை அனுசரித்தே இக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என இலங்கைக்கான குவைத் நாட்டுத்தூதுவர் அப்துல்லா அல்செனீஷி தெரிவித்துள்ளார்.

பணிபுரியும் குவைத்தில் இலங்கையர்களின் பாதுகாப்புகள் உறுதிசெய்யப்பட்டிருப்பதினாலேயே தொழில் வாய்ப்புத் தேடிச செல்வோருக்கான விசாக்களை அதிகளவில் வழங்கத தீர்மானித்திருப்பதாகவும் இவ்வாறான வேலைவாய்ப்பு விசாக்களுக்கான விண்ணப்பஙகளை இலங்கையின் வேலைவாய்ப்பு பணியகத்தினூடாக சமர்ப்பிககுமாறும் மேற்படி தூதுவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன்,இவ்வாறு விசா பெற்றுச் செல்லவுள்ள பணியாளர்களுக்கு குவைத் அரசு தொழிற்பயிற்சிகளையும் வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4,61)

## யாழ். பேருந்து நிலையத்திற்கென தலைவரை நியமிக்க வேண்டும்

### யாழ். மாவட்ட அபி. நலவுரிமைச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பேருந்து நிலையத்திற்கு ஒரு தலைவரையும் நிர்வாக இயக்குனரையும் நியமிக்கும் படி குழு ஒன்றை வடமகாணத்திற்கு அனுப்பி இப் பேருந்து நிலையங்களை (கோண்டாவில், பருத்தித்துறை, காரைநகர், வவுனியா, மன்னார்) நிலைமைகளை அவதானிக்கும் படியும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி நலவுரிமைச் சங்கம் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவைக் கோரியுள்ளது.

இது குறித்து போக்குவரத்து அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

வடமாகாணத்தில் 150 பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன. இதில் ஏறத்தாழ 35 பேருந்துகள் மாணவர்களுடைய பாடசாலைச் சேவைக்கு பயன்படுத்தப்படுகின்றன. இராணுவத் தேவைக்கும் சில பஸ்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. தவிர தனியாரின தேவைகளுக்கு சில பேருந்துகளை நாள் கணக்கில் பதிவு செய்து தமது தேவைக்கு பயன்படுத்துகின்றனர்.

ஆனால் யாழ். கோண்டாவில் டிப்போவில் 52 பேருந்துகளே ஓரளவு சிறந்தசேவையில் ஈடுபடுகின்றன. இன்னும் 100 பேருந்துகளைத் தருவிக்க வேண்டும். பாடசாலைப் பிள்ளைகள், உத்தியோகத்தர்கள், விவசாயிகள் ஆகியோர் தம் கருமங்களுக்கு உரிய நேரத்திற்கு செல்ல முடியா நிலைமை உள்ளதை சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

இத்துடன பல வாகனங்கள் பழுதடைந்திருப்பதாலும், என்ஜின்கள் உடைந்திருப்பதனாலும், என்ஜின்களின் உதிரிப்பாகங்கள தருவிக்கப்பட வேண்டும். குறைந்தது 30 என்ஜின்களாவது அனுப்பப்பட வேண்டும்.

1998 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல்களுக்குப் பின் பேருந்துகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படவில்லை. சில அதிகாரிகளின் அசிரத்தைப் போக்கே இதற்குக் காரணம். ஆகவே இதனைப் பரிசீலனை செய்து உடன் நடவடிக்கை எடுக்கும் படி வேண்டுகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## இராசி பலன்

**27.05.2004**

**(வைகாசி 14, வியாழக்கிழமை)**
**அட்டமி மு.இ. 9.13வரை**
**மகம் முற்பகல் 11.17 வரை**
**இராகுகாலம் 01.22-2.52மணிவரை**
**சு. நேரம் 7.22-8.52 மணிவரை**
**அட்டமி, நவமி**

**மேடம்**
எடுத்த கருமங்கள் தாமதமாகும், கௌரவக் குறைவு, தனவிரயம், வியாபார நன்மை

**இடபம்**
வீண் மனஸ்தாபம், காரிய தாமதம், தெய்வசிந்தை, மாதா சுகம்

**மிதுனம்**
பிரயாணம், பெரியோர் சந்திப்பு, விருந்துபசாரம், முயற்சி கைகூடும்

**கடகம்**
புத்திசாதுரியம், குடும்பநலம், அதிகாரம், காரிய தாமதம்.

**சிங்கம்**
சிந்தனை மிகுதி, நல்ல காரியம், பெரியோர் சந்திப்பு, நிலைமாற்றம்.

**கன்னி**
பிரயாணம், அமைதிக்குறைவு, முயற்சி தாமதம், கீழ்ப்படிவு.

**துலாம்**
நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம், குடும்ப சுகம், காரிய சித்தி

**விருச்சிகம்**
நல்ல மரியாதை, பிரபுத்தனம், காரியசித்தி, மனமகிழ்ச்சி

**தனுசு**
வீண் செலவு, கட்டுப்பாடு, அமைதிக் குறைவு, முயற்சி தாமதம்.

**மகரம்**
கலகம், பொருள் விரயம், முழங்கால் வலி.

**கும்பம்**
களஸ்திர நன்மை, தேகநலன், சயன சுகம், காரிய அனுகூலம்.

**மீனம்**
நண்பர்கள் சந்திப்பு, தொழில் மேன்மை, போசன நன்மை, புதிய செய்தி

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**


*வளவன்*

# இலாகா ஒதுக்கீடுகளில் தி.மு.க.திருப்தி

## கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

தி.மு.க.வைச் சேர்ந்த மத்திய தரைவழிப் போக்குவரத்துத்துறை




அமைச்சர் ரி.ஆர்.பாலுவுக்குக் கூடுதலாகக் கப்பல் போக்குவரத்துத் துறை அளிக்கப்பட்டதற்கும், மற்றும் அதே கட்சியைச் சேர்ந்த மற்றொரு இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் மத்திய வருவாய்த்துறை இணை அமைச்சராக மாற்றப்பட்டதற்கும் தி.மு.க.திருப்தியடைந்துள்ளதாக அக்கட்சித் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற அக் கட்சியின் உயர் நிலைச் செயற்திட்டக் கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமது கட்சியைச் சேர்ந்த மத்திய உள்துறை இணை அமைச்சர் எஸ்.இரகுபதிக்குக் கூடதலாக பணியாளர் நலத்துறை வழங்கப்படாதது ஒரு பிரச்சினை அல்ல என்று தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினைக்குச் சுமுக தீர்வை ஏற்படுத்தியதற்காகப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும், காங்கிரஸ் தலைவி சோனியா காந்திக்கும் நன்றி தெரிவித்தார்.

இந்த மாற்றங்களையடுத்து தி.மு.க.வைச் சேர்ந்த 7 அமைச்சர்களும் இன்று பொறுப்பேற்பார்கள் என்று கருணாநிதி கூறினார்.

மக்களவைச் சபாநாயகராக மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சோமநாத் சட்டர்ஜி தேர்ந்தெடுக்கப்படவிருப்பது பற்றிக் கேட்டபோது அப்பதவிக்கு அவர் மிகவும் பொருத்தமானவர் என்று கருணாநிதி கூறினார். (து)




**இந்தியச் செய்திகள்**

# புதிய சபாநாயகராக சோமநாத் சட்டர்ஜி

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் சோமநாத் சட்டர்ஜிக்குக் காங்கிரஸ் கட்சி அளிக்க முன் வந்த மக்களவை சபாநாயகர் பதவியை ஏற்றுக் கொள்வதென மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்துள்ளது.

கல்கத்தாவில் நடைபெற்ற அக்கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டதாகப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அக் கட்சியின் பொதுச் செயலாளர் ஹர்ஜிஸன் சிங் சுர்ஜித் தெரிவித்தார்.

மக்களவை சபாநாயகர் பதவியை அளிக்க முன் வந்த காங்கிரஸ் கட்சியின் முடிவைப் பாராட்டிய அவர், சோமநாத் சட்டர்ஜி அப்பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் என்று குறிப்பிட்டார்.

சோமநாத் சட்டர்ஜி மக்களவைச் சபாநாயகராகப் பொறுப்பேற்பதையடுத்து, கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக வாசுதேவ் பாட்டாரியா இருப்பார் என்று அவர் தெரிவித்தார்.

75 வயதான சோமநாத் சட்டர்ஜி சிறந்த பேச்சாளராகவும் நாடாளுமன்றவாதியாகவும் இருந்திருக்கிறார்.

மேற்கு வங்க மாநிலம் கோல்பூர் மக்களவைத் தொகுதிக்குப் 10 ஆவது முறையாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். (து)

## பாதுகாப்புத் துறையின் ஆயுதக் கொள்வனவு

## குற்றச்சாட்டுகள் இருந்தால் விசாரிக்கப்படும்

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் போது பாதுகாப்புத் துறையில் ஆயுதங்கள் மற்றும் தளபாடங்கள் வாங்கியது தொடர்பாக குற்றச்சாட்டுகள் இருந்தால் அவைபற்றி விசாரணை செய்யப்படுமெனப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சகப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அவர் ஆயுதங்கள், தளபாடங்கள் வாங்கும் போது வெளிப்படையான நடைமுறையைப் பின்பற்ற அரசு முயலும் என்றார். (து)



**சென்னை அண்ணா சாலையில் உள்ள தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலக வளாகத்தில் பிடிக்கப்பட்ட கழுத்துப் பகுதியில் நாமம் போன்ற வரிகள் உள்ள நாக பாம்பு. வலது பக்கத்தில் உள்ளது ஒரு வீட்டில் பிடிக்கப்பட்ட சாதாரண நாகபாம்பு.**

## வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கையை உயர்த்துவேன்

(புதுடில்லி)

நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 21 சத வீதத்துக்கு மேலான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது தமது அமைச்சகத்தின் முன்னுரிமையென மத்திய ஊடக வளர்ச்சித்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

புதுடில்லியில் தமது அமைச்சரவையின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கிராமப்புறப் பகுதிகளில் உள்ள கட்டமைப்பை மேம்படுத்தி அனைத்துக் கிராமங்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதில் முக்கிய கவனம் செலுத்தப்படுமென்றார். (து)

## மரபு முறைப்படி இராஜிநாமாக்கள்

மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் சோலின் சுராப்ஜி நேற்று முன் தினம் தமது பதவியை ராஜிநாமா செய்தார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசால் நியமிக்கப்பட்ட அவர் மத்தியில் அரசு மாறியதும் மரபுப்படி தமது இராஜிநாமாக் கடிதத்தைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைத்தார்.

ஜம்மு - காஷ்மீரில் குரியஸ் உள்ளிட்ட அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசால் நியமிக்கப்பட்ட என்.எம்.கோரா தமது பதவியை இராஜிநாமாச் செய்துள்ளார்.

அவர் தமது இராஜிநாமாக் கடிதத்தை இரண்டு நாட்களுக்கு முன்னர் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் சர்ப்பித்ததாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் அவரது இராஜிநாமாவை ஏற்றுக்கொள்வது குறித்து மத்திய அரசு இன்னும் முடிவெடுக்கவில்லை என்று அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதமரின் முதன்மைச் செயலாளரும் பாதுகாப்பு ஆலோசகருமான தலித் சிங்காவின் இராஜிநாமா நேற்று முன்தினம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (து)

# ஜெயலலிதாவின் எழுச்சியும் வீழ்ச்சியும் தமிழக அரசியல் அலசல்

*(நேற்றைய தினம் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)*

வெற்றி என்பதைக் கனவிலும் கூட நினைத்துப் பார்க்க முடியாத தொகுதிகளே பா.ஜ.கவுக்கு ஒதுக்கப்பட்டன.

40 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் என்ற அகம்பாவத்துடன் ஜெயலலிதா தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

அவர் மக்களுக்கு எடுத்துக் கூறியது மத்திய - மாநில அரசுகளின் சாதனைகளைப் பற்றி அல்ல.

'சோனியா வேற்று நாட்டில் பிறந்தவர்; பிரதமராவதற்கு அருகதையற்றவர்' - இது தான் ஜெயலலிதாவின் தேர்தல் பிரசாரம்.

சோனியா காந்தி மக்களவைத் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றிபெறவும், மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கவும் அனுமதித்தவர்கள், அந்த நேரத் தில் அவரது பிறந்த நாடு பற்றிப் பேசாதிருந்தவர்கள் எதிர்க்கட்சித் தலைவர்தான் மாற்று அரசாங்கத்தின் பிரதமர் என்ற அடிப்படை அரசியல் தத்துவத்தை மறந்து போனது தான் பரிதாபம்.

சோனியா காந்தியையும் மற்றைய கூட்டணி அரசியல் தலைவர்களைக் கேவலமான முறையில் விமர்சித்தும் நையாண்டி செய்தும் தேர்தல் பிரசாரம் செய்த ஜெயலலிதா, சோனியா இந்தியக் குடிமகளே என நீதிமன்றம் அளித்த தீர்ப்பையும் மறந்தார். எஸ்கின் மே போன்ற அரசில் விற்பனர்களின் கருத்துக்களையும் புறக்கணித்தார்.

போர்ப்பஸ் ஊழலில் ராஜீவ் காந்திக்கு தொடர்பு கிடையாது என நீதிமன்றம் அறிவித்ததும் சோனியாவுக்குத் தொடர்பு உண்டு என ஜெயலலிதாவும் பா.ஜ.கவினரும் பிரசாரம் செய்தார்கள்.

இதனையும் பார்த்துக் கொண்டிருந்த பொது மக்கள் சற்று நிமிர ஆரம்பித்தார்கள்.

தனது அதிகாரத்தின் கீழிருந்த பொலிஸ் படையை ஏவி மாற்றுக் கட்சியினருக்குப் பலவிதத்திலும் தொல்லை கொடுத்தார். தேர்தல் பிரசாரக் கூட்ட நேரம் 5 நிமிடங்கள் கூடிய தற்காக அக் கூட்ட அமைப்பாளர்கள் மீது வழக்கும் தொடுக்கச் செய்தார்.

மானத்தை இழந்தாலென்ன, மரியாதையை இழந்தாலென்ன எப்படியாவது தமிழ் நாட்டில் ஓரிரு தொகுதிகளிலாவது ஜெயலலிதா தயவுடன் வெற்றி பெற்றுவிடலாம் என்ற நப்பாசையால் அவரது தாளத்துக்கெல்லாம் ஆடிய பா.ஜ.க.வினர் தேர்தல் முடிவுக ளைக் கேட்டதும் அறிவிழந்து போனார்கள்.

பா.ஜ.க.வின் இந்துத்துவக் கோட்பாடு, ராமர் கோவில் கட்டுவதில் உள்ள ஈடுபாடு மற்றும் ஜெயலலிதாவின் மக்கள் எதிர்ப்புக் கொள்கைகள் அத்தனையும் சேர்ந்து இப்பாரிய தோல்விக்குக் களமமைத்தன.

முதலாவது உலகத் தமிழ் மாநாடு சென்னை மாநகரில் நடைபெற்ற சமயம், தமிழக முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணாவால் மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்ட பத்தினித் தெய்வம கண்ணகியின் சிலையை, அது வாஸ்து சாத்திரத்துக்கு ஒவ்வாததாக இருப்பதாக எண்ணி, எவருக்கும் தெரியாமல் இரவோடிரவாக அப்புறப்படுத்தினார் ஜெயலலிதா. அன்றியும் அதே காரணத்துக்காக, அதே கடற்கரையில் அண்ணாவால் அமைக்கப்பட்ட சீரணி அரங்கையும் தகர்த்துத் தரைமட்டமாக்கினார்.

செயலகக் கட்டடம் அமைப் பதற்காக நூற்றாண்டு காலப் பெருமை வாய்ந்த ராணி மேரி கல்லூரியை தகர்க்க நடவடிக்கை எடுத்தார்.

பொது மக்களது பாரிய எதிர்ப்பிலும் அன்று மத்திய அமைச்சராக இருந்த பாலுவின் சமயோசித நடவடிக்கையாலும் அம் முயற்சி நிறை வேறவில்லை. *(தொடரும்)*

# எதிர்க்கட்சித் தலைவராக எல்.கே. அத்வானி

பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் அடுத்த மாதம் 1 ஆம் திகதி



புதுடில்லியில் நடைபெறுமென்று அக்கட்சியின் தலைவர் வெங்கைய நாயுடு கூறியிருக்கிறார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் இல்லத்தில் நடைபெற்ற கட்சியின் மூத்த தலைவர்களின் கூட்டத்துக்குப் பின்னர் அவர் இத் தக்வலைத் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் நாடாளுமன்ற எகிர்க்கட்சிக் கலைவர் மற்றும் கட்சியின் இதர நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என அவர் கூறினார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவராக எல்.கே.அத்வானியும் நாடாளுமன்ற இரு அவைகளின் கட்சித் தலைவராக வாஜ்பாயும் இருப்பார்கள் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (து)

### *அன்புமணி அமைச்சராகப் பதவியேற்பு*

மத்தியில் குடும்பநலம் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸின் மகனான அன்புமணி ராமதாஸ் நேற்று முன்தினம் தமது அமைச்சரவைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்துக்கு இணையான மருத்துவமனையொன்று, தமிழ் - நாட்டில் திருச்சியில் அமைக்கப்படுமென்றும், மாநிலத்தில் இரண்டு மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதியளிக்கப்படுமென்றும் கூறினார். (து)

# மரியான் பர்டோலியை வீழ்த்திய மகிழ்ச்சியில் அய் சுகியாமா



மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில், பிரான்ஸின் மரியான் பர்டோலியை 6-4,6-3என்ற நேர் செற்களில் வீழ்த்தியுள்ளார். ஜப்பானின் அய் சுகியாமா (பிரான்ஸ் ஓப்பின்) ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் சுவீட்ஸர்லாந்தின் றோஜர் பெடரர், மகளிர் பிரிவில் அமெரிக்காவின் ஜீனஸ் வில்லியம்ஸ், அவரது சகோதரி செரீனா வில்லியமஸ், பிரான்ஸின் மேரி பியர்ஸ், ஜப்பானின் அய் சுரியாமா ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை முதல் இச்சுற்று ஆட்டங்கள் நடந்து வருகின்றன.

சுவீட்ஸர்லாந்தைச் சேர்ந்த 22 வயது முதல்நிலை வீரர் பெடரர் 6-1,6-2,6-1என்ற நேர் செற்கணக்கில் மிக எளிதாக பெலஜியம் வீரர் கிறிஸ்டோப் விலிகெனை வென்ற 1மணி 16நிமிடத்தில் இப்போட்டி முடிவுக்கு வந்தது.

விம்பிள்டன் மற்றும் அவுஸ்திரேலிய ஓப்பின் பட்டங்களை வென்றவர் பெடரர் என்பது குறிப்பிடத்தக்கது.

வீனஸ் வில்லியம் 6-2,6-4என்ற செறகணக்கில் தாய்லாந்தின் தாமரின் தனசுகர்ணை வீழ்த்தினார்.

செரீனா 6-2,6-2என செக்.குடியரசின் இவெட்டா பெனிசோவாவை வென்றார். லக்ஸம் பரிகின் கிளாடின் ஷாவுலை 6-2,6-3என்ற செற்களில் சாய்த்தார் மேரி பியர்ஸ்.

இதற்கு 74 நிமிடங்கள் பிடித்தன. அடுத்த சுற்றில் ஸ்பெயினின் காலலியோன் கார்சியாவுடன் மோதவுள்ளார் பியர்ஸ்.

பிரான்ஸ் ஓப்பின் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கடைசியாக 2000இல வென்ற உள்நாட்டு வீராங்கனை மேரி பியர்ஸ்.

இந்த ஆண்டுகூட அவர் பட்டம் வெல்வாரா என்று உறுதியாகக் கூறமுடியாது. அவருக்கு சவால் விடக்கூடிய வீராங்கனைகள் நிறையபபேர் களத்தில் உள்ளதே இதற்குக் காரணம்.

முன்னாள் சம்பியனான அமெரிக்காவின் ஆந்த்ரே அகஸ்ஸி, முதல் சுற்றிலேயே அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

இதையடுத்து 2005போட்டியில் தான் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் மிகவும் அரிது என்று வருத்தத்துடன் கூறினார் அகஸ்ஸி.

முன்னாள் சம்பியன் கார்லஸ் மோயா, தாய்லாந்தின் பாராடான் ஸ்ரீசாப்பன் ஆகியோர் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

பிரான்ஸ் வீரர்கள் பேர்ப்பிறிஸ் சாண்டாறோவுக்கும் ஆர்னாட் கிளமெண்டுக்கும் இடையேயான ஆட்டத்தில் 6-4,6-3,6-7,3-6,16-14என்ற கணக்கில் சான்டாறோ வென்றார்.

இப் போட்டி 6மணி 33நிமிட நேரம் நீடித்தது. நவீன டென்னிஸில் இப்படி நீண்டநேரம் நடைபெற்ற முதல் போட்டி இது.

இதற்கு முன்னர் 1998ல் ஸ்பெயின் வீரர் அலெக்ஸ் கோரட் ஜாவுக்கும் ஆர்ஜெண்டீனாவின் ஹெர்னன் குமிக்கும் இடையிலான ஆட்டம் 5 மணி 31 நிமிடங்கள் நடைபெற்றது. இதில் அலெக்ஸ் வென்றார். 5 செற்களுக்கு மேல் இப்போட்டி நீடித்தது.

ஜப்பான் வீராங்கனை அய் சுரியாமா 6-4,6-3என்ற செற்களில் பிரான்ஸின் மரியோன் பார்டோலியை வீழ்த்தினார்.

ஒற்றையர் பிரிவில் 10ஆண்டுகளுக்குப் பின் களம் இங்கியுளளார். அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை மார்ட்டினா நவரத்திலோவா இடைப்பட்ட காலத்தில் அவர் இரடடையர் போட்டிகளில் மட்டுமே பங்கேற்று வந்தார். இவரை ஆர்ஜெண்டீனாவின் கிசெலா துல்கோ 6-1,6-3 என்ற கணக்கில் எளிதாக வீழ்த்தியுளளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)



சினேக பூர்வமாக நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் மார்க்கோ பிரீஸியானோ (வலது), துருக்கி வீரர் புலன்ட் கொக் மஸூம் பந்துக்காகப் போராடும் காட்சி.

## அதிருப்தியின் வெளிப்பாடு

# கானை காக்க வைத்த முஷாரப்

பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் செயற்பாடுகள் குறித்த தனது அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் வாரியத்தின் தலைவா ஷாகார்யார் கானைச் சந்திக்காமல் காத்திருக்க வைத்த அதிபர் பர்வேஷ் முஷாரப்,

அதிபருடன் அரசு இல்லத்தில் கடந்த சனிக்கிழமை காலை இச்சந்திப்பு நடைபெறுவதாக இருந்தது. அதன்படி காத்திருந்த கானை மாலைவரை முஷாரப் சந்திக்கவில்லை. பின்னர் இச்சந்திப்பு அடுத்த வாரம் நடைபெறும் என்று அதிபர் இல்ல அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் வெளியுறவுச் செயலாளரான கானை,வாரியத் தலைவராக நியமித்தது முஷாரப்தான்.

அதிபரைச் சந்திக்க கராச்சியிலிருந்து ராவல்பிண்டி வந்து காத்திருந்த கான், பின்னர் மாலையில் ஒரு செய்திக் குறிப்பை வெளியிட்டார். அதில் அதிபர் முஷாரப்பைச் சந்திக்க அவகாசம் கோரியிருந்தேன். அடுத்த வாரம் இச்சந்திப்பு நடைபெறும் என்று எதிர்பார்க்கிறேன் என்று கூறியுள்ளார்.

வாரியத்தைச் சரியான முறையில் நடத்தாததால் அதிருப்தியுடன் இருந்த அதிபர், சந்திக்காமல் கானை அவமானப்படுத்தியதாக பாகிஸ்தான் பத்திரிகைகள் கூறுகின்றன. பின்னர் பிரதமர் ஜபருல்லா கான் ஜமாலியைச் சந்தித்து வாரியத்தின் செயற்பாடுகள் குறித்து கான் விவாதித்துள்ளார்.

இந்தியாவுடனான வரலாற்றுச் சிறப்பு மிக்க டெஸ்ட் மற்றும் ஒரு தினப் போட்டித் தொடர்களில் பாகிஸ்தான் தோல்வியடைந்ததில் முஷாரப் கடும் அதிருப்தி அடைந்துள்ளார்.

மேலும் கடைசி டெஸ்ட் போட்டியில் அக்தர் உள்ளிட்ட சில வீரர்கள் பொய்க்காயம் காரணமாக சரியாக விளையாடாதது அதைத் தொடர்நது மருத்துவப் பரிசோதனை நடத்தியது ஆகியவை குறித்தும் தனது கவலையை முஷாரப் தெரிவித்தார். (உ)

# பாக்.கிரி. சபைக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டும்

## அக்தருக்குக் கான் ஆலோசனை



பாகிஸ்தான் அணியின் புயல் வேகப்பந்து வீச்சாளர் சொஹிப் அக்தரை வேதனைக்குள்ளாக்கிய பாகிஸ்தான் கிரிக்கெற் சபைமீது அவர் வழக்குத் தொடர வேண்டும் என்று அந்நாட்டு அணியின் தலைவர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற இநதிய அணியுடனான டெஸ்ட் தொடரின் போது அதிரடியாகத் துடுப்பெடுத்தாடியமை சிலரை ஆச்சரியப்படவும் பலரை சந்தேகப்படவும் வைத்தது.

பந்து வீச்சுக்கு வராமல் கையில் காயம் என்று அவர் சாக்குப் போக்குக் கூறியதாக பாகிஸ்தான் கிரிக்கெற்சபை இவரைச சாடியிருந்ததுடன் உண்மை நிலையை அறிய நால்வர் கொண்ட மருத் துவக்குழுவையும் நியமித்தது. இச் சோதனையின் போது அக்தர் பக்க நியாயம் புரிந்தது. இவ் வாறு விசாரணை என்ற பெயரில் வேதனைக்காளாக்கியமை குறித்து அக்தர் வழக்குத் தொடரவேண் டும் என்று கான் மேலும் வலியு றுத்தியுள்ளார்.

(உ)

# விளையாட்டுச் செய்திகள்



லோட்ஸ் என்னுமிடத்தில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெற் போட்டியின் ஐந்தாவது நாளன்று இங்கிலாந்து வீரர் மார்க் புச்சர் அடித்த பந்தைப் பிடிக்கும் நியூஸிலாந்து வீரர் ஸ்ரீபன் பிளமிங்.

# பள்ளி மாணவர் கைகளில் தவழும் சச்சின் டெண்டுல்கர்

(புதுடில்லி)

ஆறாம் வகுப்பு ஹிந்தி பாடப் புத்தகங்களில் கிரிக்கெற் வீரர் சச்சின் டெண்டுல்கரின் சுவையான பேட்டி இடம்பெற்றுள்ளது.

அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு இந்தக் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்பாடம் மூலம் சச்சினைப் பற்றி பல விடயங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைத்துள்ளது.

இந்தப் புத்தகத்தை மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம தயாரித்துள்ளது. இதில் சச்சின் தவிர. அம்ஜத் அலிகான் உள்ளிட்ட தலைசிறந்த பலரது போட்டிகளும் இடம்பெற்றுள்ளன.

கற்றலை ஓர் இனிமையான அனுபவமாக உருவாக்க, சச்சின் உள்ளிட்ட பலரது பேட்டிகள் பாடப் புத்தகங்களில் இடம்பெற்றுள்ளன என்ற மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் ஜானகி ராஜன் தெரிவித்துள்ளார்.

தங்களது முன்மாதிரி நாயகர்களைப்பற்றிக் கூறுவுதை அறிந்து கொள்ளும் வாய்ப்பை குழந்தைகளுக்குக் கிடைக்கச்செய்வதே நோக்கம்.

இந்தியாவில் சச்சின் ஒரு மிகப் பெரிய மனிதர். அவரிடமிருந்து குழந்தைகள் நிறையக் கற்றுக் கொள்ள முடியும். ஆகவே, அவரைப் பற்றிய பாடம் குழந்தைகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும். அதே சமயம சச்சின் அர்ப்பணிப்பு உணர்வு, உறுதி ஆகியவற்றைக் குழந்தைகள் புரிந்து கொள்ளச் செய்யமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இநதப் பாடத்தில் தான் சாரதா ஆஸரமம் பள்ளியில் படித்த போது, நடைபெற்ற வேடிக்கையான சம்பவங்கள் குறித்து சச்சின் கூறியுள்ளது இடம்பெற்றுள்ளது.தனது நண்பர்கள், பொழுது போக்குகள் ஆகியவை குறித்து சச்சின் கூறியுள்ளார். தான் குழந்தையாக இருக்கும் போது மிகவும் குறும்பு செய்ததாகவும் விளையாட்டு மைதானத்திற்குத் தப்பியோடுவதை விரும்புவதாகவும கூறியுள்ளார் சச்சின். தான் படிப்பில் சராசரி எனவும் தெரிவித்துள்ளார்.

(உ)

### இங்கிலாந்து அணியின் கப்டன் விரைவில் ஓய்வு பெறுவார்

இங்கிலாந்து கிரிக்கெற் அணியின் முன்னாள் கப்டன் நாஸர் ஹுஸைன் ஓய்வுபெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்து 7விக்கெற் வித்தியாசத்தில் வெற்றி பெறுவதற்கு ஹுஸைனின் ஆட்டமும் உறுதுணையாக இருந்தது.

ஓய்வுபெறுவது குறித்து இன்னமும் ஓரிரு நாட்களில் முடிவு செயயவுள்ளதாக ஹுஸைன் கூறியதாக கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(உ)

# யாழ்ப்பாணக் குடும்ப- சமூக கலாசார பண்பாட்டு

**தொலைக்காட்சியில் தொடராக இடம்பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப- சமூக கலாசார பண்பாட்டு உறவுகள் பலப்படுகின்றதா? பலவீனப்படுகின்றதா?**

*என்ற தலைப்பிற்கு ''பலப்படுகின்றது'' என்ற தலைப்பின் கீழ் பாமா என்பவர் தன்வாதப் பிரதி வாதத்தினை முன்வைக்கிறார்.*

விவாத அரங்கு

# உறவுகளைப் பலப்படுத்தும்

யாழ்ப்பாணச் சமூகத்தில் விரும்பியோ, விரும்பாமலோ தொலைக்காட்சி நாடகத் தொடர்கள் திணிக்கப்படுகின்றன. திணிக்கப்பட்டவைகள் நாளடைவில் விரும்பக் கூடியாவையாகவும் மாறுவது உண்டு. அந்த வகையில் சினனத்திரை தொடர் நாடகங்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல் இலங்கை பூராவிலுமுள்ள வீட்டுக் கதவுகளைத் தட்டிக் கொண்டிருக்கிறது என்றால் மிகையதகாது.

தொடர் நாடகங்கள் வருகினறனவா? என்று பார்ப்பது மிகவும் அவசியம். அப்படிப்பார்க்கின் மிகக் குறை வென்றே சொல்ல வேண்டும். பல .வீனப்படுத்தும் நாடகங்கள் களால் மாறிவரும் எம் யாழ் சமூகம் ''நொண்டிக் குதிரைக்கு சறுக்கினது தான் சாட்டு'' என்பது போல சின்னத்திரை தொடர்கள் தான் இவர்களைப் பலவீனப்படுத்தி வருகின்றது எனச்சாட்டுக் கூறி சொல்வார்கள். ஆனால், சின்னத்திரை நாடகங்களால் கெட்டுப் போகிறது என்று சொல்பவர்கள் மிகச் சிலரே.

சின்னத்திரை ·தொடர் நாடகங்களில் குடும்ப உறவைப் பேணும் கோலங்களும் குறிப் னைகள் தொலைக்காட்சித் தொடா நாடகங்களில் இங்கு இல்லை. எனினும், பார்ப்பதற்கு கெடுதலில்லாமல் எமது பண்பாட்டுக்கு உதவுவன வாகச் சில தொடர் நாடகங்களும் வருகின்றன.

# தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள்

இத் தொடர்கள் பற்றி குறிப்பாக சின்னத்திரை நாடகங்கள் பற்றி எனது காதில் விழுத்தவைகளைப் பார்ப்போம்.

''இப்போதைய நாடகங்கள் எல்லாம் விசரர்கள் பற்றியதாக வருகுது.யாழ்ப்பாணத்தாருக்கு விசர் வந்து விடும்'' இது75வயது பெண்ணின் கூற்று. ''நல்ல புத்தி சொல்லக்கூடிய நாடகங்கள் வருகுது.உதுகளைப் பார்க்கலாம் பண்பாடும் பேணலாம்'' இது 40 வயதுள்ள ஒருவரின் கணிப்பு. ''விரசமில்லாமல் எங்கள் பண்பாட்டைப் பேணக் கூடியதாக பல தொடர்நாடகங்கள் வருகின்றன'' இது 35வயதுள்ளவரின் கணிப்பு.

யாழ் குடாநாட்டைப் பொறுத்தமட்டில் சக்தி, தூரதர்சனம், ரூபவாஹினி, ஐ.சனல்,சன்.ரி.வி போன்ற தொலைக்காட்சி அலைவரிசைகளின் தொடர்களைப் பாக்கக் கூடியதாக இருக்கின்றன. எல்லா அலைவரிசைகளிலும் அனேகமாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தொடர் நாடகங்களே ஒளிபரப்பப்படுகின்றன. தமிழர்கள் பண்பாட்டைக் கெடுக்கக் கூடிய

**ஏற்கனவே பண்பாட்டு மோகங்களால் மாறிவரும் எம் யாழ் சமூகம் ''நொண்டிக் குதிரைக்கு சறுக்கினதுதான் சாட்டு'' என்பது போல சின்னத்திரை தொடர்கள் தான் இவர்களைப் பலவீனப்படுத்தி வருகின்றது எனச்சாட்டுக் கூறி தப்பிக் கொள்கின்றன.**

வருகின்றன என்று பார்க்குமுன்,

யாழ்.குடாநாட்டின் பண்பாட்டு நிலை என்ன? எங்கே அது போகிறது? எதனால் போகிறது? போன்ற வினாக்களுக்கு விடைதேட வேண்டும்.

அவை அன்னிய நாட்டுத் தொடர்புகளாலும் பணம் வரும் விதம் தெரியாததாலும் மேல் நாட்டு மோகத்தாலும் வந்தன எனலாம். யாழ்ப்பாணக் கலாசாரத்தை கந்தபுராண கலாசாரம் என்பார்கள். அது இப்போது எப்படிமாறி வருகின்றது.

ஏற்கனவே பண்பாட்டு மோகங் தப்பிக் கொள்கின்றனர்.

கட்டுப்பாடற்ற சினிமா இறக்குமதியாலும் கட்டுப்பாடற்ற சினிமா மோகத்தினாலும் பண்பாடு சீரழிகிறது. கண்ட கண்ட படங்களை இறக்குமதி செய்வது தவறு. ஆனால் சின்னத்திரை நாடகங்கள் நமது நாட்டு யதார்த்தங்களை பிரதிபலிப்பது இல்லைத்தான். ஆனால் யாழ்ப்பாண பண்பினைப் பலப்படுத்த இது உதவுகிறது என்றால் மறுப்பதற்கில்லை.

''சினிமாவால் கெட்டுப் போகுதுீ யாழ்ப்பாணம்'' என்று

பாக தாய்ப்பாசம், குருபக்தி, இறைபக்தி போன்ற நற்பண்புகளை வளர்க்கவும், பேணவும் கூடியதாக வருகின்றன. இவை பொதுவாக யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டினைப் பேணக் கூடியதாக இருக்கின்றன.

மெட்டிஒலி, காவ்யாஞ்சலி, சித்தி உட்பட மேலும் பல தொடர்கள் பண்பாட்டினைப் பேணுவதாக உள்ளன.

தொலைக்காட்சித் தொடர் நாடகங்களை எந்த வயதினர் பார்க்கின்றனர் என்றால், நிச்சயமாக அது வயது வந்தவர்கள் தான். அதாவது, குடும்ப

**பாமா**
**சுன்னாகம்**

அங்கத்தவர்கள் மட்டுமே. இளவட்டத்தினர் இவற்றைப் பார்ப்பது மிக மிகக் குறைவு.

முற்று முழுதாக இத் தொடர்கள் பண்பாட்டுக்கு உதவுகின்றன என்று சொல்ல முடியாவிட்டாலும், யாழ் மக்கள் எமது சமூக தயாரிப்புக்களாக எதைப் பார்ப்பது என்ற வினா எழுகிறது?

எங்கள் நாட்டுக்குரிய கருப் பொருட்கள், நாட்டு பிரச்சி

இவற்றை வெறுத்து ஒதுக்காமல் இந்தியப் பண்பாட்டை பிரதிபலிப்பனவாய் இத்தொடர் நாடகங்கள் காணப் பட்டாலும் எமது தமிழ்ப் பண் பாட்டையே இது ஏதோ ஒரு வகையில் பிரதிபலிப்பதால் அவற்றைப் பார்த்து நல்ல விடயங்களை எமதாக்கி நன்றே வாழப்பழகிக் கொள்வோம். எனவே, தொடர் நாடகங்களினால் யாழ் சமூக கலாசார பண்பாட்டு அம்சங்கள் ஏதோ ஒரு வகையில் பலப்படுகின்றன என்ற எனது கருத்தை ஆணித்தரமாய் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். ■

## அம்மைநோய் பரவுகிறது

(காரைநகர்)

காரைநகரில் தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக அம்மைநோய், கொப்பளிப்பான் போன்ற நோய்கள் அதிகம் பரவி வருகின்றன. குறிப்பாக சிறுவர்கள் பலரை இந்நோய்கள் பீடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-246)

## மட்டு. விடுதலைப் புலிகளின் பகுதியில் அதிரடிப்படை அத்துமீறி நுழைவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்திற்குள் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் அத்துமீறி நுழைந்துள்ளனர்.

மட்டக்களப்பின் கினியாவத்தைப் பகுதியில் நிலை கொண்டுள்ள விசேட அதிரடிப்படையினரில் 13 பேரே இவ்வாறு அத்துமீறி நுழைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனரக ஆயுதங்கள் சகிதம் மக்கள் குடியிருப்புப் பகுதிகளூடாக படையினர் இவ்வாறு ஊடுருவியமை மக்கள் மத்தியில் பீதியை உருவாக்கியுள்ளது.

மேற்படி சம்பவமானது ஓர் அப்பட்டமான போர் நிறுத்த மீறல் என மட்டக்களப்பு மாவட்ட பொது அமைப்புக்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பில் இடம்பெறும் புலிகள் மீதான தாக்குதல்களையும், அடாவடித்தனங்களையும் அவ்வப்போது இவ்வாறு ஊடுருவும் படையினைரே நடத்தியிருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (உ-4,61)

## அபிவிருத்திக்கு 5 கிராமங்கள் தெரிவு

(மருதங்கேணி)

யாழ்.மாவட்டத்தில் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கபட்ட 5 கிராமங்களை தெரிவுசெய்து அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு நிக்கொட் நிறுவனம் முன்வந்துள்ளது.

அந்த வகையில், யாழ்.மாவட்டத்திலுள்ள அம்பனை, அரியாலை, வரணி, இயற்றாலை, ஆழியவளை ஆகிய கிராமங்கள் நிக்கொட் நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்காக ஒவ்வொரு கிராமத்திற்கும் தலா 70 இலட்சம் ரூபா நிதியை இந்நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது. சுயதொழில் மேம்பாடு விவசாய அபிவிருத்தி, மீள்நிர்மாணம் மற்றும் புனர்வாழ்வு ஆகியவற்றை மையமாகக் கொண்டு இவ் 5 கிராமங்களிலும் நிறுவனம தனது அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும். (உ-35)


பிரதி வெள்ளி தோறும்
வலம்புரியுடன்

KID'S OF ENGLISH

(ஆங்கில இணைப்பு)
வெளிவரவுள்ளது.
பள்ளிச் சிறுவர்களே!
மற்றும் பருவத்தினரே!
பயனடைய வாங்குங்கள்.

Kid's of English


**மீண்டும் உங்கள் வலம்புரியில்**

**விவாத அரங்கு**

**விடயம்**
**தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப-சமூக கலாசார பண்பாட்டு உறவுகள்**

**பலப்படுகின்றது** **பலவீனப்படுகின்றது**

*உங்கள் கருத்துக்களை*
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு விரைவாக அனுப்பிவையுங்கள்

**அன்பு வாசகர்களே!**

ஊர்த்தரிசனப் பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகிறது. உங்கள் ஊரில் நிலவும் நிறை குறை களை எழுதி, உங்கள் ஊருக்குப் புத்துயிர் அளியுங்கள். உங்கள் ஆக்கங்களைப் புகைப்படங்களுடன்,

ஊர்த்தரிசனம்
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.

ஒவ்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல் - குறள்

வலம்புரி

## இந்தியத் தூதுவரின் மனக்கொதிப்பு

அண்டை நாடான இலங்கைக்கு இந்தியா உதவி செய்கின்ற போது அதனை றோவின் ஊடுருவலாகக் கருதுவது நியாயமல்ல என இந்தியத் தூதுவர் நிருபம்சென் தெரிவித்துள்ளார்.

தனது கருத்திற்கு ஆதாரம் காட்ட விழைந்த தூதுவர் மலையகத்தில் நிலவிய ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்திசெய்ய இந்தியா முன்வந்து ஆசிரியர்களை அங்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்தபோது "ஆசிரியர்" என்ற போர்வையில் இந்தியாவின் றோ மலையகத்திற்குள் நுழையப் போவதாகக்கூறி அந்த உதவியை ஏற்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு ஆசிரியர்களை வழங்க இந்தியா முன்வந்த போதிலும் "றோ" என்ற சாயம் பூசி ஏற்க மறுத்ததன் மூலம் மலையகத்தில் உள்ள ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே பாதிக்கப் பட்டனர். பணக்கார வர்க்கம் தமது பிள்ளைகளுக்கு ஏதோவொருவகையில் கல்வியைப் பெற்றுக்கொடுக்க, ஆசிரியர்களின் பற்றாக்குறையால் ஏழை மாணவரகள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு நிருபம்சென் தெரிவித்துள்ளார்.

தூதுவர் நிருபம் சென்னின் ஆதங்கம் நியாயமானது. ஏழைகளுக்காக அவர் கவலை அடைவதானது ஒரு நாட்டின் தூதுவர் என்ற வகையில் அவரின் உயர்ந்த எண்ணப்பாட்டை தெளவு படுத்துகின்றது.

எனினும், அண்டை நாடான இந்தியா உதவி செய்ய முன்வருகின்ற போதிலும், அதனை மாற்றுக் கண்கொண்டு பார்க்கின்ற ஓர் துரதிஷ்டமான நிலைமை ஏற்பட்டதற்கான காரணம் என்ன என்பதை ஆராய்ந்து அதனை நிவர்த்திக்க வேண்டிய பொறுப்பும் இந்திய தூதுவருக்கு உண்டு.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமான உறவு தாய்-பிள்ளைககிடையிலான உறவை ஒத்தது. குறிப்பாக தமிழ் நாட்டிற்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான உறவு பூர்வகத் தொடர்பைக் கொண்டது. கலை, கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களோடு இணைந்த உறவில் தற்போது ஏற்பட்டுள்ள விரிசலுக்கான காரணங்கள் கண்டறியப்பட வேண்டியவை.

ஒரு காலத்தில் ஈழத்தமிழர்கள் முன்னெடுக்கின்ற விழாக்கள், கலாசார நிகழ்வுகள், மாநாடுகள் அனைத்திலும் தமிழக அறிஞர்கள் கலந்து கொண்டு தங்களின் புலமையை ஈழத்தமிழ் மக்களுடன் பகிர்ந்துகொண்டனர்.

இதே போல் தமிழகத்தில் நடைபெறுகின்ற பண்பாட்டு நிகழ்வுகளில் ஈழத் தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டனர். இதற்கு மேலாக ஈழத்தமிழ் மாணவர்கள் தமிழகத்தில் உயர்கல்வியை மேற்கொள் வதற்கும் வாய்ப்புகளும், வசதிகளும் வழங்கப்பட்டிருந்தன.

ஈழத்து அறிஞர்களை இந்தியாவும், இந்திய அறிஞர்களை ஈழமும் கௌரவித்த நிகழ்வுகளை வரலாற்றுப் பார்வைகள் நமக்கு ஞாபகப்படுத்துகின்றன.

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்கு திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் பட்டம் வழங்கிக் கௌரவித்ததெனில் மேற்கூறப்பட்ட கருத்தின் உண்மைத் தன்மைக்கு அது தகுந்த சான்றாக அமையும்.

அந்நியர் ஆட்சியில் சைவத்தையும், தமிழையும் காப்பாற்றுவதற்காக ஆறுமுகநாவலர் அவர்கள் தமிழகத்தில் அச்சியந்திரசாலையை ஆரம்பித்து அதனூடாக ஈழத்தில் துண்டுப்பிரசுரங்கள் மூலம் மதப் பிரசாரம் செய்தாராயின் அப்போது ஈழத்திற்கும் இந்தியாவிற்கும் இருந்த உறவு எத்தகையது என்பதை தூதுவர் நிருபம்சென் உணர்ந்து கொள்வார் என நம்பலாம்.

ஆனால் இப்போது அந்த நிலைமை மாறிவிட்டது. இந்தியா உதவி செய்வதாகக் கூறிக் கொள்கின்ற போதெல்லாம் ஏன்? எதற்காக? அதற்குள் ஏதேனும் வில்லங்கம் இருக்குமா? என்ற வினாக்கள் முன்னெழுகின்றன. அதற்குக் காரணமும் உண்டு.

இலங்கை ஆட்சியாளர்களின் கொடூரத்தால் நசியுண்டு போன ஈழத்தமிழ் மக்கள் இந்தியாவின் உதவியையே தஞ்சமாகக் கருதினர். எதிர்பார்த்த உதவியை செய்வது போல இந்திய அமைதிப்படை இலங்கைக்குள் வந்தது. ஆனால் அது அமைதிப் படையல்ல, அமளிப்படை என்பதை பின்னர் தான் மக்கள் உணர்ந்து கொண்டனர். அன்று ஏற்பட்ட வெறுப்பு இன்று வரை தொடர்கின்றது.

இந்தியா உதவும் என நம்பியிருந்த ஈழத் தமிழர்களுக்கு அந்த நாட்டுப்படைகள் செய்த கொடூரங்கள்-இழப்புகள் இன்னமும் மக்கள் மனங்களில் நிழலாடுவதை தூதுவர் நிருபம்சென் உணர்ந்து கொள்வாராயின் தமிழ் மக்களின் நிலைப்பாடும் சரியென்பதை அவர் ஏற்றுக் கொள்வார்.

# உலர் உணவு நிவாரண நிறுத்தத்திற்கு உலக நாடுகளின் அழுத்தமே காரணம்

## யாழ். வந்த ஹரிம் பீரிஸ் விளக்கம்

(அலுவலகச் செய்தியாளர்)

**யாழ். குடாநாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டதற்கு உலக நாடுகளின் அழுத்தமே காரணம்.**

**இருப்பினும், கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வடக்கு -கிழக்கில் வழங்கப்பட்டு வந்த இந்த உலர் உணவு நிவாரணத் திட்டத்திற்கு உலக நாடுகள் எவையும் உதவி புரிந்தது கிடையாது.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளரும் புனர்வாழ்வு,புனரமைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரிம்பீரிஸ்.

யாழ். மாவட்ட மக்களின் பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பில் ஆராயும் பொருட்டு நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்த ஹரிம்பீரிஸ், யாழ். செயலகத்தில் வைத்து அரசாங்க அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் ஆகியோரைத் தனித்தனியே சந்தித்தார்.

இச்சந்திப்புக்களில் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி சுசில் சந்திரபால மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் மத்தியில் தொடர்ந்தும் ஹரிமபீரிஸ் கருத்து வெளியிடுகையில்,



சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதும் குடாநாட்டில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதும் மிகவும் அவசியமானதாகும். கடந்த 2 வருடங்களாக எந்தவொரு அபிவிருத்திப்பணியும் மேற்கொள்ளப்படவில்லை. இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

யாழ். குடாநாட்டில் புனர்வாழ்வுப் பணிகளைப் மேற்கொள்ள அமைச்சு நடவடிக்கை எடுக்கும். இங்கு இயல்பு நிலை ஏற்படுவதற்கு அரசு, புலிகள் மற்றும் மக்களுக்கு இடையில் ஓர் இணக்கப்பாடு ஏற்படுதல்வேண்டும்.

இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மீளக்குடியமர்வு என்பது இராணுவ அரசியல் மனிதாபிமானமான ஓர் விடயமாகும். இது குறித்து விரிவாக ஆராயப்படவேண்டும்.

குடாநாட்டு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நீண்ட நோக்கில் மேற்கொள்ளப்படுவதற்கு நாட்டில் சகஜ நிலை ஏற்படுவது அவசியம். அத்துடன் நாகர்கோயில், பூநகரி பாதையைத் திறப்பதற்கு படைத்தரப்புடன் விரிவாகப் பேசவேண்டும்.

உலக உணவு நிவாரண விநியோகத்தில் பல்வேறு குழப்பங்களும் குளறுபடிகளும் நிலவுவதாக பல காலமாகவே சுட்டிக்காட்டப்பட்டுவந்தது.

நிவாரணத்தை மீள வழங்குவது குறித்து விரிவாக ஆராய்ந்து விரைவில் நல்ல முடிவு அறிவிக்கப்படும்.

எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தில் புனர்வாழ்வு மற்றும் வீடமைப்புத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றார்.

(உ-19,43)

## சமாதான முன்னெடுப்புப்பற்றி கூட்டணிக் கட்சிகளுடன் ஜனாதிபதி கலந்தாலோசனை

(கொழும்பு)

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிகக்கும் சகல கட்சிகளுடனும் ஜனாதிபதி சந்திரிகா கலந்துரையாடல் ஒன்றினை நடாத்தியுள்ளார்,

கண்டியில் கடந்த திங்களன்று இடம்பெற்ற இக் கலந்துரையாடலின் போது பல முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப் பட்டுள்ளதுடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான திகதியினை நிர்ணயிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டுள்ளது.

அத்தடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் ஒரு குழுவாக இணைந்து செயற்படுவது குறித்தும் பொது இணக்கப்பாடுகளை எட்டுவது தொடர்பாகவும் இக் கலந்துரையாடலில் ஆராயப் பட்டது.

(உ)

## வினைத்திறன் மிக்கதாக இரயில் சேவை மாற்றம்

(நுவரெலியா)

இரயில் சேவையினை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக போக்குவரத்து அமைச்சின் செயலாளர் டி.எஸ்.ஜெயவீர தெரிவித்தார்.

இப்புதிய திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள சகல பாகங்களுக்குமான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் இரயில்களின் எண்ணிக்கைகள் அதிகரிக்கப்படவுள்ளதுடன், ஒவ்வொரு இரயில் சேவைக்குமிடையிலான நேர வித்தியாசமும் குறைப்புச் செய்யப்படவுள்ளது.

அத்துடன், தற்பொழுது இரயில்வே திணைக்களத்தின் கீழ் பணிபுரியும் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களின் பணியினையும் விஸ்தரிப்புச் செய்யவும் போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்மூலம் இரயில் சேவைகள் துரிதப்படுத்தப்படுவதனால் மக்கள் பூரணமான நன்மை பெறுவர் எனவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4,61)

### சாயி அருளமுதம்



சூரியனைப் பார்க்க நாம் விளக்கை எடுத்துக் கொண்டு போவதில்லை. சூரியனின் ஒளியலேயே நாம் சூரியனைப் பார்க்கின்றோம். அதேபோல கடவுளைக் காண நமக்குக் கடவுளின் அருள் தான் தேவை. பிற சாதனங்களால் நாம் கடவுளைக் காண இயலாது. மேகங்கள் கலையும் வரை பொறுத்திருந்தால் தான் சூரிய ஒளியைப் பார்க்க இயலும். அதே போல அஞ்ஞானம் அகலும் வரையில் பொறுமையாகப் பிரார்த்தனை செய்தால் தான் இறையருள் கிடைக்கும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

## மீன்பிடிக் கைத்தொழிலை சீராக்க சீனா உதவும்

(கொழும்பு)

இலங்கையல் மீன்பிடிக் கைதொழிலைச் சீரான முறையில் அபிவிருத்தி செய்வதற்கு சீனா அரசாங்கம் உதவ முன்வந்துள்ளதாக மீனவ நீரியல் வள அமைச்சர் சந்திர சேன விஜயசேன தெரிவித்துள்ளார்

தேவையான தொழில்நுட்ப அறிவையும் நிதியுதவிகளையும் வழங்குவதற்கு தமது நாடு தயாராக இருப்பதாக இலங்கைக்கான சீனத்தூதுவர் சுங்வோக் சியாங் தம்மிடம் உறுதியளித்துள்ளதாகவும் அமைச்சர் சந்திரசேன விஜயசேன கூறினார்.

சீனத் தூதுவரை அமைச்சர் விஜசேன சந்தித்துப் பேசிய பின்னர் அச்சந்திப்புக் குறித்து ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத்தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது குறித்துப் பேசுகையில்,

சீனாவின் மீன்பிடித்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் இவ்வாணடின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது உதவிகள் குறித்து விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றார்.

(உ-60,10)

## திருமலை விவசாயிகளிடையே நவீன திட்டங்கள் அறிமுகம்

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களம் திருகோணமலை மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி நவீன முறையிலான பல திட்டங்களை அமுல்படுத்தவுள்ளது.

நிக்கொட் நிறுவனம், ஆசியஅபிவிருத்தி வங்கி ஆகியவற்றின அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டத்தின கீழ் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஆயிரத்து 560 விவசாயிகள் 40 குழுக்களாக பிரிக்கப்படவுள்ளனர்.

இதன் கீழ் பயிற்சி நெறிகள் நவீனமுறையிலான, விவசாயச் செய்கைகள் குறித்த அறிவூட்டல்கள் என்பன அமுல்படுத்தப்படவிருக்கின்றன.

கட்டம் கட்டமாக இடம் பெறவுள்ள இத்திட்டங்களின் கீழ், நீர்ப்பாசனத்திட்டங்களின் கீழான நெற்செய்கைகள், விதை நெல் பாவனை, பயிர்ப்பாதுகாப்பு, அறுவடையின் பின்னரான தொழில்நுட்ப முறைகள் என்பனபற்றிய அறிவூட்டல்கள் வழங்கப்படும் என வடக்கு-கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (உ-4)

# ஸ்ரீ.சு.கவின் வீழ்ச்சியில் எழுச்சி கொள்வதே ஜே.வி.பியின் நோக்கம்

## ஹெல உறுமய தெரிவிப்பு

(பாணந்துறை)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழித்துவிட்டு தனது கட்சியைப் பலப் படுத்துவதே ஜே.வி.பியின் பிரதான நோக்கமாகும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான அதுர லியே ரத்தின தேரர் கூறியுள்ளார்.

பாணந்துறையில் இடம்பெற்ற கட்சியின் பொதுக் கூட்டத்தில் மேலும் உரையாற்றிய அவர், ஜே.வி.பியின் செயற்பாடு ஊடகங்களை வாடகைக்கு எடுத்துக்கொண்டது போனறது. தான் கூறுவது சரி என்று விமல் வீரவன்ச நினைத்துக் கொண்டிருக்கின்றார். அவர் கூறுகின்ற வகையில் ஜாதிக ஹெல உறுமய செயற்பட வேண்டும் என நினைக்கிறார். அப்படி நாங்கள் செயற் படாததால் எங்களுக்கு `எதிராக சேறு பூசும் நடவடிக்கையில் அந்தக் கட்சி ஈடுபடுகிறது.

விகாரைகளை சேதப்படுத்துவதுடன எமக்கெதிராக சுவரொட்டிகளையும் ஒட்டுகிறது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி ஜே.வி.பியை விமர்சிக்கும் போது மௌனமாகவே அக்கட்சி யினர் இருக்கின்றனர்.

நாம் பேசும் போது கேலி செய்யும் ஜே.வி.பியினர் ரணில் விக்கிரமசிங்க பேசும் போது மௌனமாக இருக் கின்றனர்.

ஏனெனில் ரணில் விக்கிரமசிங்கா ஆங்கிலத்தில் பேசுவதை ஜே.வி.பி யினர் புரிந்துகொள்ள முடியாது.

எம்மிடம் புதிய பொறுப்பொன்று கையளிக்கப்பட்டுள்ளது. பௌத்தர் களை பலவந்தமாக மதம்மாற்றும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டியதே அது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## மிலேனியம் சிற்றி விவகாரம்

# இழப்பீட்டுத் தொகையை செலுத்த உயர் நீதிமன்று கால அவகாசம்

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி இராணுவ ஆயுதக்களஞ் சியம் சுற்றிவளைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக குற்றவாளியாகக் காணப் பட்டுள்ள முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையை கட்டம் கட்டமாகச் செலுத்துவதற்கு உயர் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இராணுவ ஆயுதங்களை களஞ சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த அத்துரு கிரிய மிலேனியம் சிற்றியை சுற்றிவளைத்ததால் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக அங்கு கடமையாற்றிய 5அதிகாரிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வழக்குத் தாக்குதல் செய்திருந் தனர்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் இவர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்குமாறு உடுகம் பொலவுக்கு உத்தரவிட்டி ருந்தது. அதற்கு உடுகம்பொல கால அவகாசம் தருமாறு நீதி மன்றைக் கேட்டிருந்தார். இதனையடுத்தே நீதிமன்றம் அவருக்கு உரிய கால அவகாசத்தை வழங்கியுள்ளது.(60,10)

# உலக உணவு ஸ்தாபன பிரதிநிதிகள் யாழ். வருகை

(திருநெல்வேலி)

யாழ். குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்து அறிவதற்காக உலக உணவு ஸ்தாபனத்தின் பிரதி நிதிகள் குழு ஒன்று நேற்றைய தினம் குடாநாடடிற்கு வருகைதந்திருந்தது

யாழ். குடாநாட்டில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் மீன்பிடித் திணைக களத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் செயற்திட்டங்கள் குறித்து இக் குழுவினர் விரிவாக ஆராய்ந்தனர்.

உலக உணவு ஸ்தாபனத்தின் ஆசிய பொருளாதார ஒருங்கிணைப் பாளர் கிஸ்பி சிமோன், தொழில் நுட்ப அதிகாரிகளான லேஜர் டிபர், யசின் சிக்கி, பெர்னாண்டோ கதரின் ஆகியோர் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் அரச செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்து கலந் துரையாடினர்.

அத்துடன் இனி வரும் காலங் களில் யாழ். குடாநாட்டில் மேற் கொள்ளப்படவுள்ள உலக உணவு ஸ்தாபனத்தின் செயற்திட்டங்கள் குறித்தும் இச் சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டது. (உ-43)

# 14 ஈழத்தமிழ் அகதிகள் நெடுந்தீவிற்கு நேற்று வருகை

(நெடுந்தீவு)

இந்தியாவில் இருந்து 14 இலங்கை அகதிகள் படகுகள் மூலம் நேற்று நெடுந்தீவை வந்தடைந்தனர். நேற்றுக் காலை 10.30 மணிய ளவில் நெடுந்தீவு மேற்கு பெரிய துறைப் பகுதியில் இவர்கள் வந்தி றங்கினர்.

இவர்களில் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் உள்ளனர்.

இந்தியாவிலிருந்து நெடுந்தீவுக்கு வந்திறங்கிய அகதிகள் நெடுந் தீவுப் பொலிசாரால் வீசாரிக்கப் பட்டபின்னர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பேரானந்தத்திடம் ஒப்படைக் கப்பட்டனர். பினனர் அரச அதிபருடாக அவர்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ச)

## அரசின் நடவடிக்கைக்கு சங்கங்கள் ஆதரவு

(கொழுமபு)

அரிசியின் விலையைக் குறைக்கும் அரசின் நடவடிக்கைக்கு உதவ கூட்டுறவுச் சங்கங்கள் முன்வநதுள்ளன.

இதற்கமைய கூட்டுறவுச் சங் கங்களின் களஞ்சியசாலைகளில் உளள நெல்லைக் குற்றி உடனடியாக சந்தைப்படுத்த கூட்டுறவுச் சங்கங்கள் நடிவடிக்கை எடுத்துள்ளன.

பொலநறுவை, அனுராதபுரம், அம்பாறை, திருகோணமலை, மட்டக் களப்பு, பதுளை, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் களஞ்சிய சாலைகளில் உள்ள நெல்லே இவ்வாறு குற்றப்பட்டு சங்கங்கள் மூலம் விற்பனை செய் யப்படவுள்ளது. (உ-60,10)

### இந்திய தேசிய ...

இலங்கையின் இனப்பிரச்சி னையில் இந்தியா அக்கறை காட்டு வதற்கு சூத்திரதாரியாக அப்போ திருந்த ஜே.என்.டிக்ஷிற் இப்போது இந்திய தேசிய பாதுப்பு ஆலோச கராக நியமனம் பெற்றிருப்பது முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் என்றும், இது இனப்பிரச்சினை விவகாரத்தில் மீண்டுமொரு இந்திய நேரடி தலையீட்டுக்கு வழிவகுக்கும் என்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

## முன்னாள் பிரதமர் ரட்ணசிறி பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகினார்

(கொழும்பு)

இரண்டு புதிய அமைச்சர்களும் இரு பிரதி அமைச்சர்களும் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்னிலையில் பதவிபபிரமாணம் செய்து கொண்டனர்.

ஜனாதிபதி மாளிகையில் நடை பெற்ற இந் நிகழ்வில் புத்தசாசன பொதுப்பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்குகள் துறை அமைச்சராகவும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அரசியல் யாப்பு திருத்தங்கள் சம்மந்தமான அமைச்சராக டி.யூ. குணசேகராவும், வெளிவிவகார பிரதியமைச்சராக பேராசிரியர் விஸ்வ வர்ணபாலவும் பதவிப்பிர மாணம் செய்து கொண்டனர். (உ 60-10)

# தேர்தலுக்கான திகதி நாளை அறிவிப்பு

(கொழும்பு)

கலைக்கப்பட்ட ஆறு மாகாண சபைகளுக்குமான தேர்தலுக் குரிய திகதி நாளை அறிவிக்கப் படும் என தேர்தர்கள் ஆணை யாளர் தயாநந்த திஸ்ஸநாயக்க அறிவித்துள்ளார்.

தென், மேல், சம்பிரகமுவ, மத்திய, வடமத்திய, ஊவா ஆகிய ஆறு மாகாண சபைகளுக்கு மான வேட்புமனுக்கள் நாளை 28ம் திகதி நண்பகலுடன் ஏற்கப் பட்டுவிடும் என்றும் இதன் பின்பே தேர்தலுக்கான திகதி அறிவிக் கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார். (ம)

# தையல் இயந்திரம் இன்று அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சமூக வியல் சமூகத்தின் சமூகப்பணிச் செயற்பாடுகளின் ஓர் அம்சமாக அரங்கக் களப்பணிக் கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள காட்டுப் புலத்திற்கு தையல் இயந்திரம் ஒன்றினை கையளிக்கும் நிகழ்வு இன்று மு.ப. 11.00 மணிக்கு யாழ். பலகலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் இடம்பெறவுள்ளது.

சமூகவியல் சமூகத்தின் தலைவி செல்வி சாரதா தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் தையல் இயந்திரத்தினை கிராம மக்கள் சார்பாக பாடசாலை அதிபர் எஸ். தனபாலன் பெற்றுக் கொள்ளவுளளார்.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ், கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப. கோபால கிருஸ்ண ஐயர், சமூகவியல் துறைப் பேரா சிரியர் என். சண்முகலிங்கன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள னர். (ந)

### முதலில் அரசு...

அரசுக்கும், விடுதலைப் புலி களுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் முகமாகவே நேற்றைய சந்திப்பு இடம்பெற்றது.

இச சந்திப்பின் போது இலங்கை அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலி களுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம் பிப்பது தொடர்பிலான அனைத்து அம்சங்களும் ஆராயப்பட்டுள்ளது.

இந்நிலையில் சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பில் பேச்சுவார்த் தைக்குரிய இரு தரப்பினரும் பொது வாக இணக்கப்பாடு ஒன்றுக்கு வநத பின்பே நோர்வே அரசு இது தொடர பாக அறிவிப்பை வெளியிடும் என்று விசேட சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் பத்திரிகையாளர் களிடம் தெரிவித்துள்ளார். (ம)

## குண்டுகள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொம்மாதுறை பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த நான்கு குண்டுகளை இராணு வத்தினர் நேற்று மீட்டுள்ளனர்.

கண்ணிவெடி ஒன்று மற்றும் மூன்று கிளைமோர் குண்டுகளே இவ்வாறு மீட்கப்பட்டு பின்னர் படையி னரால செயலிழக்கச் செய்பபட்டது. (த)

### இடைக்கால நிர்வாக .......

தைக்குச் செல்லவேண்டும் என்பதையே எமது தலைமைப்பீடம் விரும்புகிறது. இதனை நாம் நோர்வேயின் விசேட தூதுவரிடம் நேற்று வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

இப்போது நாம் இறுதித்தீர்வு சம்மந்தமாக பேசிக்கொண்டிருப் போமாயின் அது எமது மக்களை ஏமாற்றும் ஒரு செயலாகவே இருக்கும் எனக் கருதுகிறோம். அநாவசியமான கால இழுத்தடிப்புக்களை எமது தலைமைப்பீடம் ஒருபோதும் விருமப மாட்டாது.

சமாதான பேச்சுவார்த்தை தொடர் பாக ஜனாதிபதியின் தெளிவான உத்தரவாதத்தை அவரிடம் இருந்து பெறவேண்டி உள்ளது. ஏனெனில் அவருடன் சேர்ந்துள்ள கூட்டுக் கட்சிகளின் நிலைப்பாடு எத்தகையது என்ற உத்தரவாதத்தை ஜனாதிபதி எமக்குத் தரவேண்டும். இதனை நோர்வேத் தூதுவரிடம் விளக்கிக் கூறியுள்ளோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சில விடயங் களில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும், இடைக்கால தன்னாட்சி அதிகாரமுடைய நிர்வாக அமைப்பு முறை தொடர்பாக தெளிவான எமது நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துமாறு நோர்வே தூது வரிடம் கூறியுள்ளோம்.

ஜனாதிபதியின் நிலைப்பாட்டை அறிந்த பின்பே சமாதானப் பேச்சுக் கான இறுதி முடிவை எமது தலைமை பீடம் எடுக்கும்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தொடர்ந தும் படுகொலை நடப்பதும் யுத்த நிறுதத மீறல்கள் நடப்பதும் கண்டிக கப்படக் கூடியவையாகும் இத்த கைய செயற்பாடுகள் தொடர்ந்தும் நடக்குமாக இருந்தால் யுத்த நிறுத்தத்தை நாம் முன்னெடுத்துச் செல்வதில் நெருக்கடி நிலையை சந்திக்க வேண்டி வரும் என்றும் சு.ப. தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை விடுத்தார். (ம)

# இறால் வளர்ப்பு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

அக்குவா சேவிசஸ் தனியார் நிறுவனம் மற்றும் போரூட் நிறு வனங்களின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட கடல் வள அபிவிருத்தி நிலையம் நடாத்தும் பண்ணையில் இறால் வளர்ப்புப் பற்றிய செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

நேற்றுக் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை முதல்நாள் செயலமர்வு நடைபெற் றது. (ச-19)

### நிவாரணத்தை...

இதனால் பாதிக்கப்பட்டுள்ள 66ஆயிரத்து 536 குடும்பங்கள் சார்பில் பல்வேறு தரப்புக்களும் குரல் கொடுத்து வருகின்றன. இதனடிப் படையிலும், இதன் நியாயப்பாட்டை புரிந்து கொண்டுள்ள வகையிலும் நிறுத்தபபட்ட அனைவருக்கும் தொடர்ச சியாக 6 மாதங்களுக்கு நிரரணம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இந்த நிவாரணத்தை இவர்களுக்கு வழங்குவது பற்றி பரிசீலித்து வருகின்றோம் என்று குறிப்பிட்டார். (மற்றொரு செய்தி உள்ளே) (உ-16)


## கருத்தரங்கு

### பெண்களின் உடல் நலம் சம்பந்தமான கலந்துரையாட்ல்

இடம் : TRRO கேட்போர் கூடம்
4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

காலம் : 27.05.2004 (வியாழக்கிழமை)

நேரம் : காலை 10.30 மணி (புதிய நேரம்)

கருத்துரை வழங்குபவர்: Dr. G. பவானி
(மகப்பேற்று வைத்திய நிபுணர்
யாழ். போதனா வைத்தியசாலை)

உள்ளடக்கம் : பெண்களுடைய உடல்நலம் சம்பந்தமான பிரச்சினைகள், தீர்வுக்கான வழிகள்

குறிப்பு : * ஆர்வமுள்ள அனைவரும் பங்கு பற்றலாம்.
* உங்கள் பிரச்சினைகளை கலந்துரையாடலுக்கு முன் எமக்கு எழுத்து மூலம் அனுப்பிவைக்கலாம்.

*பெண்கள் அபிவிருத்தித் திட்டம்*
*அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,*
*106,4ம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

(C-187)



## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* கணனி பக்க அமைப்பாளர்கள் (ஆண்கள் இரவுக்கடமை)
* கணனி பக்க அமைப்பாளர்கள் (பயிலுநர்கள் இருபாலாரும்)
* அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
* ஓப்செட் மெசின் இயக்குநர்கள்
* ஓப்செட் மெசின் பயிலுநர்கள்

தகுதியானவர்கள் தாங்கள் தெரிந்தெடுத்த பதவியை குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, *ஆளணி முகாமையாளர், வலம்புரி, இலக்கம் 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்* எனும் முகவரிக்கு 02.06.2004 க்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

குறிப்பு : யாழ். நகர மையத்திலிருந்து 10km தூரத்திலுள்ள வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*நிர்வாக உத்தியோகத்தர்.*


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.